நினைவு

# மலர் கொத்து



அமரர்

## திரு. வினாசித்தம்பி கனகலிங்கம்

30.12.2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர்

# திரு. வினாசித்தம்பி கனகலிங்கம்

அவர்களின் கற்பக விநாயகர் அடி பேறுபெற்ற

31ஆம் நாள்

# நினைவுமலர் கொத்து

# 30.12.2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



**எங்கள் குடும்பத்தின் கோபுர விளக்காக புவிதனில் அவதரித்து அயராது உழைத்து முழுநிலவாக பவனிவந்து வாழ்ந்த வினாசித்தம்பி கனகலிங்கம் அவர்களின் திருப்பாதங்களுக்கு இம்மலர் கொத்தினை சமர்ப்பிக்கின்றோம்.**

*பூவுலகில் நிறைவான செல்வங்களை பெற்று அன்பான மனைவியும் ஆற்றல் மிகு பிள்ளைகளையும் அறிவுநிறை மருமக்களையும் பாசம்மிகு பேரப்பிள்ளைகளையும் நேசம் நிறைந்த சகோதரர்களையும் கண்டு உலக வாழ்வியலில் நின்று உற்றார், உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள் அனைவருடனும் மகிழ்வுடன் வாழ்ந்து ஏகாதந்தன் திருவடியை சென்றடைந்த அப்பாவின் திருப்பாதங்களிற்கு இந் நீதியின் குரல் மலர்க் கொத்தினை சமர்ப்பிக்கின்றோம்.*

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி**



**இங்ஙனம்,**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயின் மடியில்

15

09

1955

தாயகத்தின் மடியில்

30

11

2021



அமரர்

# திரு வினாசித்தம்பி கனகலிங்கம்

## திதி நிர்ணய வெண்பா

சீர்பெறு பிலவ வருட கார்த்திகை திங்கள் பதினாளாம் நாள்
தேய்பிறை ஏகாதசி திதி தனில் தென்னை பனை வயல் வரம்பு
நீர். நிலம் நிறையூர் கள்ளியடிதனில் அவதரித்த வினாசித்தம்பி
கனகலிங்கம் அவர்கள் கற்பகவிநாயகர் திருவடி இறைபதம்
அடைந்த நாள் அதுவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோத்திரப் பாடல்கள்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கைதணி விப்பான் விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து .

## தேவாரம்

மூவரென இருவரென முக்கண்ணுடை மூர்த்தி
மாவின்கனி தூங்கும்பொழில் மாதோட்டநன் னகரிற்
பாவம்வினை யறுப்பார்பயில் பாலாவியின் கரைமேல்
தேவன்னெனை ஆள்வான்றிருக் கேதீச்சரத் தானே.

## திருவாசகம்

நெடுந்தாக நீ என்னை ஆட்கொள்ள
யான் ஐம்புலன்கள் கொண்டு
விடும் தகையேனை விடுதிகண்டாய்
விரவார் வெருவ
அடும் தகை வேல் வல்ல உத்தர
கோச மங்கைக்கு அரசே
கடும் தகையேன் உண்ணும் தெள்நீர்
அமுதப் பெருங்கடலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

உருக்கி என் உள்ளத்துள்ளே
    ஊறலந்தோறல் மாறாந்
திருக்குறிப்பு அருளும் தில்லைச்
    செல்வன் பாற்செல்லும் செல்வில்
அருக்கரை அள்ளல் வாய
    கள்ளரை அவியாப்பாவைப்
பெருக்கரைக் காணாக் கண் வாய்
    பேசாது அப்பேய்களோடே

## திருப்பல்லாண்டு

நிட்டையி லாவுடல் நீத்தென்னை
    ஆண்ட நிகரிலா வண்ணங்களும்
சிட்டன் சிவனடி யாரைச்
    சீராட்டும் திறங்களுமே சிந்தித்(து)
அட்ட மூர்த்திக்கென் அகம்நெக
    ஊறும் அமிர்தினுக்(கு) ஆலநீழற்
பட்டனுக்(கு) என்னைத்தன் பாற்படுத்
    தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

தாவறு முலகெலாம் தந்த நான்மகத்
தேவுதன் றுணைவியாய்ச் செறிந்த பல்லுயிர்
நாவு தொறிருந்திடு நலங்கொள் வாணிதன்
பூவடி முடிமிசைப் புனைந்துயோற்றுவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# திருப்புகழ்

ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியரு ணாசல மமர்ந்த பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் வினாசித்தம்பி கனகலிங்கம்

## அவர்களின் வையகத்தின்

## வாழ்வியலில் நிகழ்ந்தவை

நாட் திசையும் கடல் சூழ்ந்ததும் வானுயர்ந்த மலைகளும் மலை நிறைந்த தேயிலை செடிகளில் நீர் நிறை ஆறுகளும் நெற்கழனிகளும் நிறைந்து செல்வம் செழிக்கும் திரு நாடாம் இலங்கைத்திருநாட்டின் நாவலரும், பாவலரும், காவலரும் வளர்த்த பழம்தமிழ் பசுமைத்தமிழ் இன்பத்தமிழ், இனிமைத்தமிழ், செந்தமிழ், சீர்நிறைந்த சிறப்புத்தமிழ் பிறந்து, வளர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கும் வடதிசையில் நெய்தலும், மருதமும் நிறைந்த மன்னார் மாவட்டத்தின் மாவின்கனி தூங்கும் பொழில் மாதோட்ட நன்நகர் பாவவினைகளையறுக்கும் பாலாவியின் கரையில் பிறைசூடிய திருக்கேதீச்சர பெருமானும் கௌரி அம்பாளும் வீற்றிருக்கும் திருக்கேதீச்சர பதிக்கு வட திசையில் உள்ள கள்ளியடி எனும் ஊரினிலே இவ்வூரான செந்தமிழும் சைவசமயமும் சிறப்பாக செழித்து வளர்ந்து வாழும் மக்களும் வயலும் வரம்பும் தென்னையும், பனையும், வாழையும் கமுகும் நிறைந்த இயற்கை எழில் சூழ்ந்த கிராமமாகும். மருத நிலத்தினிலே வேளாண்மை துறையினை தன் முழுத்தொழிலாகவும் கால்நடைகளை (எருமை மாடுகள், காளைகள், பசுக்கள்) ஆடுகள் போன்றவற்றினை அடுத்த தொழிலாகவும் கொண்டு வாழ்ந்து வந்த வினாசித்தம்பி மகிழம்மா தம்பதியினருக்கு ஆற்றல் மிகு ஐந்தாவது மகனாக கனகலிங்கம் ஐயா அவதரித்தார்.

இவரின் உடன்பிறப்பினராக மூதறிஞர் முத்துலிங்கம், நல்லியளாள் நாகேஸ்வரி, அறிவுசார் அன்னம்மா, போசனை ஆசான் அமிர்தலிங்கம், தருமதர் தருமலிங்கம் (துரை), மங்கை நள்ளாள் மகேந்திரி, ராஜா ராசலிங்கம், பண்பின் சிகரம் பஞ்சலிங்கம், சுகந்திர தமிழன் சுந்தரலிங்கம், புன்னகை அரசி புஸ்பராணி, பாசத்தின் உறைவிடம் பரமலிங்கம், வண்ணக்கிளி வசந்தகுமாரி (அமரர்) ஆகியோர்கள் அவதரித்தனர். அக்காலத்திலே இவரின் தந்தையரான வினாசித்தம்பி ஐயா மிகுந்த உழைப்பாளியாவார். எருமை மாடுகள், மாடு கன்றுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காளைகள் வளர்ப்பதில் மிகுந்த திறமைசாளியாவார். நெற்பயிர் செய்கையிலும் மிளகாய் பயிர் செய்கையிலும் ஆற்றல் மிக்கவர் அக்காலத்தினிலே மிகுந்த சிரமத்தின் மத்தியில் குழந்தைகளை கள்ளியடி அரசினர் தமிழ்கலவன் பாடசாலையில் கல்வி கற்க வைத்தார். சிறுவயதில் இருந்தே தந்தைக்குதவியாகவும் சகோதரர்களிற்கு உதவியாகவும் வாழ்வதில் எங்கள் கனகலிங்கம் முதலிடம் வகித்தார். இவர் சிறுவயதினிலே பெற்றோருக்கு மதிப்பு கொடுப்பதும் நீதிக்காக நியாயத்திற்காக குரல் கொடுப்பதிலும் உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள் ஆகியோர்களிற்கும் உதவி புரிவதில் கர்ணனாக திகழ்ந்தார். நியாயம் நீதிகளை கதைப்பதில் தருமரானார். காடுகளை அழித்து வயல் வரம்புகளை உருவாக்கினார். மிளகாய் கன்றுகளை நாட்டுவதற்காக தோட்டங்களை தந்தையாருடன் சேர்ந்து உருவாக்கினார். மூத்த சகோதர சகோதரிகள் இளைய சகோதர சகோதரிகளுடன் அன்பாகப் பழகுவார்.

உதவிகள் புரிவதிலும் அவர்களிற்கு ஏதாவது துன்பங்கள் துயரங்கள் நிகழுமாயின் வீரவேங்கையாக வெகுன்று எழுவார். மாடுகளை வளர்ப்பதில் மாபெரும் கெட்டிக்காரன். எருமை பசுக்களிலும் நாட்டுப்பசுக்களிலும் பால் கறப்பதில் அவருக்கு நிகர் அவரே தான் சிறு வயதினிலேயே காளை மாடுகளை கைறு வீசி பிடிப்பதில் அருச்சிணன் எந்த முரட்டு காளைகளையும் அரை நொடியில் அடக்கி விடும் ஆற்றல் மிக்கவர். கனகு என்று அவருடைய மச்சான் அழைத்தால் அவரின் காலடியில் வந்து நிப்பார். மச்சானும் மச்சானும் சேர்ந்து வரம்பு கட்டுவது வயல் விதைப்பது அறுவடை செய்வது போன்ற விடயங்களில் தந்தையாருக்கு தோளோடு தோள் கொடுத்து உதவி புரிவார்கள். காலச்சக்கரம் உருண்டோடியும் மூத்த சகோதர சகோதரிகள் இல்லற வாழ்வினிலே காலடி எடுத்து வைத்தனர். இவருடைய வாழ்க்கை துணைவியாரும் பெற்றோர்களால் நிச்சயிக்கப்பட்டார்.

கடலும் கடல் சூழ்ந்த இடமும் காடும் காடு சார்ந்த இடமும் வயலும் வயல் சார்ந்த இடமும் சூழ்ந்த செழிப்பு நிறைந்த முல்லைத்தீவு மாவட்டத்தின் தெங்கு நிறை தேவிபுரத்தினிலே நாணயவான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகேஸ் நாகம்மா தம்பதியினருக்கு தேன்மொழியாள் தெய்வமணி, நாஇனியாள், நாகபூசணியம்மா (மனோன்மணி) குணநிதியாள் குணமணி வண்ணமயிலாள் வசந்தமல்லிகா (இசாமணி) குணசீலனான குணசேகரலிங்கம், வீரநங்கை விஜயமணி, திருவருட்செல்வனான திருநாமம், சீர்மாறன் சிவபாலன், கலையரசி கற்பகமணி ஆகியோர்கள் பிள்ளைகளாக இருந்தனர்.

வினாசித்தம்பி அப்பாவும் மகிழம்மா அம்மாவும் மூத்த அண்ணனான முத்துலிங்கம் அவர்களும் சேர்ந்து வண்ண மயில் வசந்தமல்லிகாவினை கனகலிங்கம் ஐயாவிற்கு வாழ்க்கைத் துணைவியாக தெரிவு செய்தனர். பெற்றோரும், மாமன் மாமியும், சகோதர சகோதரிகளும், மச்சான்மார், மைத்துனிமார், உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலூ ரவர்கள் அனைவரும் வாழ்த்துரைக்க அந்தணர்கள் மந்திரம் கூற கனகலிங்கம் வசந்தமல்லிகா திருமணம் மகிழ்வுடன் நடைபெற்றது. அக்காலகட்டத்தினிலே காலச்சக்கரம் உருண்டோடிக்கொண்டிருந்தது. எமது நாட்டின் சூழ்நிலை பொருளாதார நெருக்கடி வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு போன்ற சூழ்நிலையில் தோட்ட பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு தங்களை வளமாக்க வினாசித்தம்பி அப்பா அயாராது உழைத்தார். அதற்கு தோளோடு தோள் கொடுத்து கனகையாவும் உழைத்து நின்றார்.

கள்ளியடி, முடக்கனாறு, கறையான் பிட்டி, நாகதாழ்வு, ஐயனார் தீவு, உடமோட்டை, நீராவி, வேம்படிகுளம், முதலியார்கமம், கன்னாட்டி, ஆத்திமோட்டை, ஓரான் கட்டை, பிறமுறிப்பு ஆகிய இடங்களில் எருமை மாடுகள் பசுக்கள் கன்றுகள் மேய்ப்பதில் கனகையாவின் கால்கள் படாத இடங்களே இல்லை. கள்ளியடி, வேப்படிக்குளம், ஓரான் கட்டை, போன்ற இடங்களில் நெற்செய்கையில் ஈடுபட்டிருக்கும் வேளையில் வயல்களிலும், வரம்புகளிலும், நீர்களிலும், நிலைகளிலும், குளங்களிலும், குட்டைகளிலும், அலைந்து திரிவார். பயிர்களை அழிக்கும் மிருகங்களை காட்டு விலங்குகளை அழிப்பதற்காக தந்தையாருடன் மூத்த, இளைய சகோதரர்களுடன் மச்சான்மார்களுடன் வேட்டைக்கு செல்வதில் வேட்டையாடுவதில் மாபெரும் வீரனாவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக நாட்கள் நகர்ந்தன நாட்கள் மாதங்கள் வருடங்களாகின தனக்கென ஒரு வீடு தன் மனைவியுடன் இல்லறத்திலே நல்லறம் கண்டு வாழும் வேளையிலே ஐந்து மழலைச் செல்வங்கள் அவனியிலே அவதரித்தனர். இன்ப இதயவான் லிங்கேஸ்வரன், கோகுலவாணி கோகிலவர்தினி, சுந்தரவதனன் சுரேஸ்வரன், உலகநாயகன் லோகேஸ்வரன், பாசதீபன் பகீரதன் ஆகியோர்கள் ஆவர்கள். தனது பிள்ளைகளை வளர்ப்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தனர். மடிமீதும் தோள்மீதும் கால் மீதும் கை மீதும் பாராட்டி சீராட்டி வளர்த்தார். பசுப்பாலினை கறந்து கொண்டு வந்து மனைவியிடம் கொடுத்து காய்ச்சி வைப்பார். தாயார் தகப்பனுடன் சேர்ந்து பிள்ளைகளை வளர்ப்பதில் மிகுந்த உறுதுணையாக நின்றார்.

பிள்ளைகளை ஆரம்பக்கல்விக்கு கள்ளியடி அ/த/க பாடசாலைக்கும் உயர்கல்விக்கு இலுப்பக்கடவை ம/வி அனுப்பி வைத்தார். மைத்துனர் மார்களான அமிர்தலிங்கன் (துரைச்சாமி) சிவஞானம், செல்வச்சிராளன், கந்தசாமி, குணசேகரலிங்கம், திருநாமம், சிவபாதம், சகோதரர்களாகிய முத்துலிங்கம் அமிர்தலிங்கம், துரை, பஞ்சு, மணியம், மான்குட்டி ஆகியோர்களுடன் சேர்ந்து ஐயனாத்தி நீராவி தோட்டங்கால் மிளகாய் பயிர்களில் ஈடுபட்டு அதிக வருமானத்தை பெறுவதற்கு அயராது உழைத்து நின்றார். யார் பிழை விட்டாலும் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற பேதமின்றி நீதியை உரைப்பதிலும் நீதிக்காக வாதிடுவதிலும் அயராது உழைத்து நின்றார். கனகு என்றால் அந்த இடமே அமைதியாகும் என்று ஊரவர்கள் கூறுவார். மைத்துனிமார்களான தெய்வமணி, மனோன்மணி, குணமணி, விஜயமணி, கற்பகமணி, செல்வக்குணவதி, சந்திரவதனி, கௌரி, அஜந்தா, சற்குணவதி ஆகியோர்களுடனும் உடன்பிறவாத சகோதரரான முத்துலிங்கம், கந்தசாமி, நாகேஸ்வரன், சடாச்சரம், ராஜமலர், சாந்தினி, கலைச்செல்வி ஆகியோர்களுடன் கூறமுடியாத அன்பும் பாசமும் வைத்திருந்தார். தந்தையராகிய வினாசித்தம்பி அப்பாவிற்கு வயது அதிகரிக்க அதிகரிக்க மாடு கன்றுகளின் முழுப்பொறுப்புக்களையும் நெற் பயிர்ச்செய்கையின் முழுப்பொறுப்பினையும் தானே ஏற்றுக் கொண்டார். எமது தமிழ் பிரதேசத்தில் ஏற்பட்ட அசம்பாவிதமான சூழ்நிலையால் தனது ஐந்தாவது மகனாகிய பகீரதனை தங்களுடன் வைத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு மூத்த புதல்வரான லிங்கேஸ்வரனையும், ஒரே ஒரு மகளான ராசாத்தியினையும் சுரேஸ், லோகேஸ்சையும் லண்டன் மாநாகருக்கு தனது சகோதரர்களிடம் அனுப்பி வைத்தார். அதன் பின்னர் இதயத்திலே பாசவுணர்வுகளை சுமந்து கொண்டு உடலினிலே உறுதியை வளர்த்துக் கொண்டு உழைத்தார் உழைத்தார் ஓயாது உழைத்துக்கொண்டிருந்தார். எவர் எதை சொன்னாலும் தான் நினைப்பதையே செய்வார். மூத்த சகோதரருக்கு மரியாதை கொடுப்பார்.

தனது பிள்ளைகளிற்கு திருமணம் செய்வதற்காக ஆயத்தங்கள் நடைபெற்றன. தனது மூத்த சகோதரரான முத்துலிங்கம் ஐயாவிடம் அனுமதி பெற்றார். அதன்படி பிரான்ஸ் தேசத்தில் வசிக்கும் சண்முகராசா செல்வராணி அவர்களின் மகளான தூயவள் துதிகலாவை மூத்தமகனான லிங்கேஸ்வரனுக்கு வாழ்க்கை துணைவியாக தெரிவு செய்தார். தனது மூத்த அக்காவாகிய நாகேஸ்வரி அமிர்தலிங்கம் தம்பதியினரின் இளைய மகனாகிய விஜயவீரனாகிய ஜெயக்குமார் அவர்களை தனது ஒரே ஒரு மகளாகிய கோகிலவர்தனிக்கு வாழ்க்கை துணையாக தேர்வு செய்தார். அன்பு மகனாகிய சுரேஸ்வரனுக்கு புளியங்குளம் ஓமந்தையை சேர்ந்த ஜெயகொடி செல்வநாயகி தம்பதியினரின் மகளாகிய சுந்தரவதனி சுபாசினியை வாழ்க்கைத் துணைவியாக தேர்வு செய்தார்.

தனது மகனான லோகேஸ்வரனுக்கு தனது இளைய தங்கையாகிய கள்ளியடியை சேர்ந்த புஸ்பராணி கந்தசாமி தம்பதியினரின் இளைய மகளாகிய மயில் தோகையாள் மயூரியாவை வாழ்க்கைத் துணைவியாக தேர்வு செய்தார். தன்னுடனே தொடர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கக் கடைசி மகனான பகீரதனுக்கு வெள்ளாங்குளத்தைச் சேர்ந்த வீரகத்தி பிள்ளை சரஸ்வதி தம்பதியினரின் இளைய மகளான கீதாயினி கீர்த்தனாவினை கடைசி மருமகளாக தெரிவு செய்தார். பெற்றோர்களும் பெரியோர்களும் உறவினர்களும் அயலவர்களும் நண்பர்களும் வாழ்த்து உரைக்க அந்தணர்கள் மந்திரம் ஓத ஐவர்களுக்கும் குறிப்பிடப்பட்ட கால வித்தியாசத்தில் திருமண நிகழ்வுகள் நடந்தேறின. எல்லோரும் தமது இல்லற வாழ்வினிலே மகிழ்வுடன் வாழ்ந்து வரலாயினர். கனகய்யாவின் வாழ்வினிலே இன்பங்களும் துன்பங்களும் வண்டிச்சக்கரம் போல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுழன்று கொண்டே இருந்தன. வெளிநாடுகளில் உள்ள நான்கு பிள்ளைகளுடனும் ஒவ்வொரு நாட்களும் ஒரு முறையேனும் கதைக்காமல் விட மாட்டார். அவரது துணைவியாருடன் அதிகமான பாசம் கொண்டவர். மோதல், கூடல், ஊடல் என அன்பாக இருப்பார். அதிகாலை வேலை ஐந்து மணிக்கு தேநீர் அருந்தி விட்டு பட்டிக்கு செல்வார். பால் கறந்து அனுப்பி விடுவார். வேம்படி குளம், புறமுறிப்பு, ஒராங்கட்டை, இலந்தமோட்டை, முதலியார் கமம் காணிகளுக்கு சென்று பார்வை இடுவார். காலை உணவினை பட்டியில் வைத்தே உண்பார்.

பின்னர் வேலை ஆட்களுடன் மாட்டினை மேய்க்கச் சென்று விடுவார். மதிய வேளை உணவினை வீட்டினில் உட்கொள்வார். உடனடியாக மாடுகள் மேய்க்கப்படும் இடத்திற்கு சென்று விடுவார். மாலை 7 மணியளவில் எப்படியாவது வீடு வந்து சேர்ந்து விடுவார். அவரின் பிள்ளைகள் இருக்கும் நிலையில் அவசியமோ அவசரமோ இல்லை. ஒரு முயற்சியாளன் உழைப்பாளி அவரின் இளைய மகனின் முயற்சியினை கண்டு மனம் மகிழ்வார். சில வேளைகளில் அறிவுரைகள் கூறுவார். இவ் வேளையில் அவரினால் தாங்க முடியாத சம்பவங்கள் நடந்தேறின. 1992ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 25ஆம் திகதி தனது பாசம் மிகு சகோதரன் சுந்தரலிங்கம் (மணியன்) இயற்கை எய்தினார். இந்த செய்தி அவரின் இதயத்தினை தாக்கி விட்டது. அனல் இடைப்பட்ட மெழுகு போலே துயர் உற்றார். துடித்தார் துவண்டார், அழுதார் 2002ஆம் ஆண்டு பங்குனி மாதம் 30ஆம் திகதி தந்தையார் வினாசித்தம்பி மாலை பத்துமணிக்கு இறைவனடி சேர்ந்தார். தன்னை வளர்த்து ஆளாக்கி இந்த வையகத்தில் எந்தவொரு குறையும் இல்லாமல் வாழ வைத்த தந்தையார் ஐயா தன்னை விட்டு போய் விட்டாரே என்ற துயரம் அவர் நெஞ்சடைத்தது. எவ்வொளவோ துன்பத்தை அனுபவித்த அவருக்கு இதனை தாங்க முடியாமல் துடித்தார், அழுதார் தந்தையை நினைத்து நினைத்து அவர் செய்த செய்வித்த வேலைகளை எண்ணி எண்ணி துயரம் கொண்டார். ஆறுதல் அடைய பல மாதங்கள் சென்றன. 2010ஆம் ஆண்டு மார்கழி மாதம் 3ஆம் திகதி 2ஆவது அண்ணன் அமிர்தலிங்கத்தின் மனைவி அண்ணியான செல்வகுணவதி சென்னையில் காலமானார் என்ற செய்தி கேட்டு மனம் வருந்தினார் துயரமடைந்தார். 2011ஆம் ஆண்டு தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதம் 4ஆம் திகதி தனது அன்புத் தாயார் இறைவன் திருவடி சேர்ந்த செய்தி கேட்டு அலறினார். பத்து திங்கள் சுமந்து பெற்று பாலூட்டி சீராட்டி தன்னை வளர்த்தெடுத்த அம்மா என்னை சூழ்ந்திருக்கின்ற அனைத்து செல்வங்களையும் பெற்றுத்தந்த அம்மா அம்மா அம்மா என்று ஆயிரம் முறை அழுதும் அவரால் அம்மாவின் பிரிவை மறக்க முடியவில்லை. ஆறுதல் அடையாது அலைந்து திரிந்தார். அடுத்த வாரமே அடுத்த துன்பம் 2011ஆம் ஆண்டு தை மாதம் 11ஆம் திகதி இளைய அண்ணனின் மூத்த மருமகன் சிவஞானசுந்தரம் சுரேஸ் அவர்கள் மன்னார் பாலத்தடியில் வாகன விபத்தில் அகால மரணமானார். தாயின் துயரை தாங்காமல் துடித்தவருக்கு இந்த செய்தி மேலும் துன்பத்தைக் கொடுத்தது. 2011ஆம் ஆண்டு 09ஆம் மாதம் 18ஆந் திகதி மூத்த அக்காவின் இளைய மகள் வஜிதா (செல்லம்) லண்டனில் இறைவனடி சேர்ந்த செய்தி கேட்டு நெஞ்சு பொறுக்காது நிலை குலைந்து நின்றார்.

எதையும் தாங்கும் இதயம் கொண்ட கனகப்பா துயரங்களை சுமந்து கொண்டே இருந்தார். அடுத்து 2வது அக்காவின் கணவர் 2015ஆம் ஆண்டு தை மாதம் 10ஆம் நாளில் சிவஞானம் ஐயா இறைவனடி சேர்ந்தார். மச்சான் மச்சான் என அன்போடு அழைத்தவரும் தனக்கு தோளோடு தோள் கொடுத்து உழைத்தவரும் தனது உயர்வுக்காக அல்லும் பகலும் பாடுபட்டவராகிய மச்சானை இழந்து பரிதவித்தார். எனி என்ன செய்ய போகின்றேன் எப்படி வாழ போகின்றேன் என அழுதார் அழுதார் அழுதுகொண்டே இருந்தார். அது மட்டுமா 2016ஆம் ஆண்டு 09ஆம் மாதம் 02ஆம் திகதி அம்மாவை போல தன்னைப் பார்த்து வந்த பாதுகாத்து வந்த பெரிய அண்ணனின் மனைவி அண்ணியாரான தெய்வமணி அம்மா இறைவனடி சேர்ந்த செய்தி கனகையாவின் இதயத்தை பிளந்தது. அண்ணன் படும் துன்பத்தைக் கண்டு அழுதார் தனக்கு தானே ஆறுதல் கொண்டார். 2018ஆம் ஆண்டு தை மாதம் 18ஆம் திகதி பெரிய அக்காவின் கணவர் அமிர்தலிங்கம் (துரைச்சாமி அப்பா) சிவபதம் அடைந்த செய்தி மீண்டும் அவர் வாழ்வினிலே பேர் இடியாக வந்து விழுந்தது. யாருக்கு யார் ஆறுதல் கூறுவது எப்படி கூறுவது என எண்ணி எண்ணி அழுதார். ஒன்றாக படுத்துறங்கிய நாட்களையும் எண்ணி பார்த்து துயரம் கொண்டார். 2020ஆம் ஆண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்த்திகை மாதம் 01ஆம் திகதி பெரிய அக்காவின் மகன் விஜியகுமார் (கிளி) மாரடைப்பினால் காலமான செய்தி இரு காதுகளிற்குள்ளும் நெருப்பினைக் காய்ச்சி குழம்பாக ஊற்றுவதினை போன்ற துயரத்தை கொடுத்தது. அக்காவிற்கு ஆறுதல் கூற முடியாமல் துடித்தார். உறவுகளோடு சேர்ந்து ஓ என்று அலறினார். எல்லாத் துன்பங்களையும் சுமந்து துயரங்கொண்டு தன்னைத் தானே தேற்றி வாழலானார். இந்தக் காலச்சக்கரம் சுழன்று கொண்டிருக்கும் வேளையிலே பிள்ளைகளுடன், மருமக்களுடன் தொலைபேசிகளில் தொடர்பு கொண்டு கதைப்பார்.

கனகப்பாவிற்கு இன்ப மொழியான் இலக்கியன், குயில் மொழியாள் கூர்த்திகா, அன்புக்கினியவள் அனிக்கா, அன்புராஜ் அவநிஸ், அன்புத் தெய்வன் அஜிஷன், அருள் வேந்தன் அனிஷன், அருள்குமரன் அகர்ஷன், பிரியமானவன் பிரணவன் எனும் மழலை செல்வங்கள் பேரப்பிள்ளைகளாக அவனியில் பவனி வந்தனர். ஒவ்வொரு நாட்களும் தொலைபேசி மூலமாக பிள்ளைகள் மூலமும் பேரப்பிள்ளைகள் மூலமும் வயலில் நின்றும் மாடுகளுடன் நின்றும் வீட்டில் நின்றும் கதைக்காத நாட்களே இல்லை என்று கூறலாம். ஓயாத அலைகளாக உழைத்து நின்றார். மதிய வேளையிலும் மாலை நேரத்திலும் இரவு வேளையிலும் பேரன் பிரணவனுடன் விளையாடுவார். இனிப்பு பண்டங்கள், விஸ்கேற்றுக்கள், உணவுகள் கொடுத்து உறவாடுவார். அப்பா கட்டிலுக்கு உறங்க செல்லும் போது பிரணவன் ஓடிச் சென்று கட்டிலில் படுத்து விடுவான். இதை பார்த்து மகிழ்வடைவார். அப்பா படுக்கும் பொது நெஞ்சினில் ஏறி பேரன் படுப்பான். இந்த மகிழ்வினிலே வாழ்வினை நடத்தி வந்தார். நித்திரை கொள்ளும் வேளையைத் தவிர உழைக்காத நேரமே இல்லை. நூறு ஏக்கருக்கு மேல் நெற்செய்கையாலும் இருநூற்றி ஐம்பது பசுமாடுகளை வளர்ப்பதையும் ஈடுபட்டு வந்தார். துணைவியார் மல்லிகா அம்மா கூறுகின்ற வார்த்தைகளை கேட்பார் தான் நினைப்பதையே செய்வார். பிள்ளைகள் மருமக்கள் எல்லோரும் மிக உயர்ந்த நிலையில் இருந்த நேரத்தில் தனது கை கால்களைக் கொண்டு உழைத்து வாழ வேண்டும் என்ற ஓர் உயர் எண்ணம் கொண்ட உயர்ந்த மனிதர் கனகப்பா ஆவார். வீதியினிலே பழைய நண்பர்களைக் கண்டால் உடனே நின்று கதைப்பார். ஏழை எளியவர்களிற்கு யாராவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பம் செய்தால் நீதியை கேட்பதில் முன் நிற்பார். உறவுகள் இரத்த உறுத்துக்கள் யாராவது தவறு செய்தால் தட்டிக் கேட்க தயங்காத ஒரு நீதியின் தலைவரானார் கனகப்பா. 2வது மகன் சுரேஸ் அடுத்த வருடம் எப்படியும் அப்பாவை பார்க்க வருவேன் என்றார். கனகப்பா மகிழ்ச்சியாக இருந்தார். மூத்த மகன் லிங்கன் பங்குனி மாதம் வந்து அப்பாவை லண்டனுக்கு கூட்டிச் செல்வேன் என்றார். கனகப்பா மகிழ்ச்சியாக இருந்தார்.

மூத்த மகன் லிங்கன் பங்குனி மாதம் வந்து அப்பாவை லண்டனுக்கு கூட்டிச் செல்வேன் என்றும் விமானத்தில் ஏற்றி அப்பாவை பார்க்க வேண்டும் என்றும் கனவு கண்டார். இந்த வேளையிலே 30ஆம் திகதி செவ்வாய் கிழமை பிற்பகல் நான்கு மணியளவில் துணைவியார் மல்லிகா அவர்களுடன் கதைத்துக் கொண்டு மாடு அடைக்க வெளிக்கிட்டார். அம்மா தானும் வருவதாக கூறினார். அவர் தேவையில்லை எனவும் தான் தனியாக போவதாகவும் கூறினார். அம்மாவிற்கும், அப்பாவிற்கும் இடையில் அன்பான வாக்கு வாதம் இறுதியில் தான் நினைத்தபடி தனியாகவே சென்றார். காலதேவனின் திருவிளையாடல் ஆரம்பமாகியது. மாடுகள் அடைக்கப்பட்டன. மாடு அடைத்த செந்தாளனை நக்கீரனுடன் செல்லும் படி கட்டளை பிறப்பித்தார். செந்தாளன் மறுத்தான். தானும் வருவதாக கூறினான்.

நக்கீரன் தன்னுடன் மோட்டார் சைக்கிளில் வரும்படி கேட்டார். கனகப்பா மறுத்து விட்டார். நீங்கள் இருவரும் வீட்டிற்கு செல்லுங்கள் நான் ஆற்றுக்குள்ளால் வருவேன் என கூறி புறப்பட தொடங்கினார். அந்த நேரத்தில் அப்பன் வருகை தந்தார் கனகன்னா நடந்து போக வேண்டாம் என்னுடன் மோட்டார் சைக்கிளில் வாருங்கள் என அன்பாகக் கேட்டார். இருவரும் நீண்ட நாள் நண்பர்கள் பத்து நிமிடங்கள் வாக்கு வாதம் நடைபெற்றன. முடிவில் தனியாகவே நடக்க தொடங்கினார். இரவு ஏழு மணி ஆகியும் அப்பா வீட்டிற்கு வராததை கண்ட பகி உடனடியாக நக்கீரனுடன் தொடர்பு கொண்டார். நக்கீரன் தாயாருடன் தொடர்பு கொண்ட போது தாயார் கனகன்னை ஆற்றுக்குள்ளால் தான் சென்றார் எனக் கூறி ஓலமிட்டு ஓடிச்சென்று பாருங்கள் எனக் கத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னக்குமாரும் நக்கீரனும் தாயாருடன் சென்று பார்த்த பொழுது நீருக்குள் வீழ்ந்து கிடப்பதனைக் கண்டனர். உடனடியாக பகி மூலமாக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். வைத்தியர் கூறிய வார்த்தைகள் நீதியின் பிறப்பிடம் நேர்மையின் உறைவிடம் தர்மத்தின் காவலன், உழைப்பில் உயர்ந்தவன், உயர்வான எண்ணம் கொண்டவன், உத்தமன், நல்லவன் வல்லவன் அவனின் இன்னுயிரை தர்மதேவன் கவர்ந்து சென்று விட்டான். பூவுலகில் புனிதமாய் வாழ்ந்த கனகப்பா இவ்வுலகை விட்டு சென்ற செய்தி கேட்டு மனைவி அழுது மயங்கி விழ, பிள்ளைகள் கதறி அழ பேரப்பிள்ளைகள் ஆற்ற முடியாது ஓலம் இட மருமக்கள் துயரம் கொண்டு அழுது நிற்க மைத்தனர்கள் ஐயோ என அலறி நிற்க மைத்துனிகள் ஐயோ என அலறி நிற்க உறவினர்கள் கண்ணீர் விட்டு கதறி அழ அவர் வளர்த்த ஆயினம் உம்பா உம்பா என கதறி ஓலம் இட நெற்பயிர்கள் பூமித்தாயை நோக்கி கண்ணீர் விட 2021ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 30ஆம் திகதி மாலை 6.30 மணியளவில் கற்பக விநாயகப் பெருமான் திருவடியடைந்து தெய்வமானார்.


**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்**
**வான் உறையும் தெய்வத்துள் வைக்கப்படுவார்"**

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி**

முடிசார்ந்த மன்னரும் மற்றும் உள்
ளோரும் முடிவில் ஒரு
பிடிசம்பா ராய்வெந்து மண்ணாவ
தும் கண்ட பின்னும் இந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பதால்
லால் பொன்னின் அம்பலவர்
அடிசார்ந்து நாம் உய்ய வேண்டும் என்றெ
அறி வார் இல்லையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வேம்படி குளம் 1ஆம் கட்டை
வழிப்பிள்ளையார் ஆலயம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நீராவிப் பட்டிப் பொங்கல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 60ஆவது பிறந்தநாளின் போது . . .





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணைவியாளின் துயரநிலை

பூவுலகில் புனிதமாய் வாழ்வதற்கு
பூமாலை பொட்டு தாலியினைக் கட்டி
தாரமாக்கி என்னை வாழவைத்தீர்கள்
பிள்ளைகளுடன் பெருமையாய் வாழும் பொழுது
கேட்டது அனைத்தையும் கொண்டு வந்து தந்தீர்கள்
கேட்காமல் செய்தவை ஆயிரம் ஆயிரம்
மனைவியாக என்னை மாண்புடன் வாழவைத்து
மகிழ்வான பல சேவைகள் செய்து
மகிழ வைத்தீர்கள் அப்பா
வீட்டு வேலை செய்யும் போதும்
தோட்ட வேலை செய்யும் போதும் மாமா மாமி
மைத்துனர் மார் அக்கா தங்கை அனைவருடனும்
இருக்கும் போது பகிடிகள் பல கூடி பாசத்துடன்
இருந்தீர்கள் அப்பா
பிள்ளைகள் வெளிநாடு சென்ற வேளையிலும்
தொல்லைகள் ஒன்றும் கொடாது என்னையும்
என் பகியையும் ஏற்று இன்பம் தந்தீர்கள் அப்பா
எந்த நேரத்திலும் எந்த காலத்திலும்
எங்களுக்காக வாழ்ந்தீர்கள் அப்பா
இன்று பூவிழந்தேன் பொட்டிழந்தேன்
புளகாங்கிதம் இழந்தேன் இன்று
புன்னகையும் இழந்தேன் பொன் இழந்தேன்
பொன் நகையும் இழந்தேன் பொற் தாலியும் இழந்தேன்
தரணியிலே இன்று தவித்து ஓலமிடுகின்றேன் உங்களின்
திருமுகத்தை ஓர்முறை இனி காண்பேனா
ஓடி வந்து ஒரு முறை ஒரு வார்த்தை உரைப்பீரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திக்கு திசை தெரியாது திகைக்கின்றேன்
திசை நீங்கள் சென்ற இடம் எதுவோ என அழைக்கின்றேன்
மனையுண்டு மக்களுண்டு உற்றார் உறவுண்டு
பேரப்பிள்ளைகள் உண்டு மருமக்கள் உண்டு
எத்தனை உறவு இருந்து நீங்கள் இல்லையே அப்பா
கணப்பொழுதில் காலனவன் உங்கள் இன்னுயிரை
கொண்டு சென்று விட்டானே அப்பா
எத்தனை முறை அழுதாலும் எத்தனை முறை அழுதாலும்
நீங்கள் வரமாட்டீர்கள் அப்பா
கற்பக விநாயகரின் திருவடியினை உங்கள் ஆத்மா
சென்றடைய சாந்தி பெற






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளைகளின் மன வருத்தம்

அறிவுதனை பெற்றுவிட அயராது உழைத்தீர் அப்பா
அன்புதனை காட்டி சிறப்புடனே வளர்த்தீரே அப்பா
பசும்பால் தந்து தயிர் தந்து நெய் தந்து
பாங்குடனே ஊட்டினீரே அப்பா
வெளிநாடு செல்ல வைத்து மேதினியில் சிறப்பாக
வாழவைத்தீர்கள் அப்பா
தொலைபேசி எடுத்தவுடன்
என்னம்மா என்ன ஐயா என்ற சொல்லே
முதலினில் வரும்
அடுத்து வரும் வார்த்தைகளில் நெஞ்சுருகி
நிற்போம் அப்பா
நீங்கள் உரைத்த அன்புரைகள்
நீங்கள் உரைத்த அறிவுரைகள்
நீங்கள் தந்த தண்டனைகள் என்றென்றுமே
எங்கள் மனதில் நிற்கின்றன
பேரப்பிள்ளைகள் தேடுகின்றன உங்கள்
பிள்ளைகள் வாடுகின்றனர்
அப்பா அப்பா என்று அலறும் ஒலி கேட்கவில்லையா
ஆர் உயிரே அப்பாவே ஓர் முறை
ஓடி வருவீரா
அரை நொடியில் எம்மை விட்டு ஆண்டவரிடம்
சென்று விட்டீர்களே அப்பா
ஆறாத் துயர் கொண்டு அழுகின்றோம் அப்பா
ஆண்டவர் திருவடியில் உங்கள் ஆன்மா
சாந்தி பெற ஐங்கரப் பெருமானின் திருவடியை
வேண்டுகின்றோம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மருமக்கள் புலம்பல்

மாமா மாமா என அன்புடன் அழைத்தோம்
மாமாவே எங்கள் ஆசை மாமாவே
எதை கேட்டாலும் வாங்கி தருவீர்கள்
எதை சொன்னாலும் கேட்டு கொள்வீர்கள்
நீதிக்காக குரல் கொடுத்தீர்கள் நியாயத்திற்காக
கதைத்து நின்றீர்கள்
பாசத்தை அள்ளி கொட்டினீர்கள்
பண்புடனே வாழ்ந்திருந்தீர்கள்
மருமக்களாக எண்ணாது மக்களாகவே எண்ணிணீர்கள்
நீங்கள் புரிந்த உதவிகள் நீங்கள் புரிந்த சேவைகள்
என்றென்றுமே நிலைத்து நிற்கும் மாமா உங்கள்
ஆத்மா சாந்தி பெற எங்கள் விநாயகப் பெருமானை
வேண்டி நிற்கின்றோம்.



அழகைப் பற்றி கனவு
காணாதீர்கள். அது உங்கள்
கடமையை பாழாக்கி விடும்...
கடமையை பற்றி கனவு
காணுங்கள் அது உங்கள்
வாழ்க்கையை அழகாக்கும்!

அப்துல் கலாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரப்பிள்ளைகளின் பாச அலைகள்

அப்பப்பா அம்மப்பா என அன்புடனே அழைத்திருந்தோம்
என்னம்மா என்னப்பா என
எங்களை அழைப்பீரே அப்பப்பா அம்மப்பா
உங்கள் மொழி கேட்பதற்காய் தொடர்ந்து
தொலைபேசி மணிஓசை எதிர்பார்த்திருந்தோம்
இடி விழுந்தது போல் உங்கள் இறுதி செய்தி
கேட்டு துயர் அடைந்தோம்
உங்களிடம் வந்து நாங்கள் இருந்த நேரத்திலே
எங்களை மடி மீது தோள் மீதும் சுமந்து
திரிந்தீர்களெ அம்மப்பா அப்பப்பா
சிரித்த முகத்துடனும் வெறுமேலுடனும் எங்களை
அணைத்து வைத்து முத்தமிடவதை மறக்க
முடியுமா அப்பப்பா
உங்களை நாம் பிறந்த நாட்டிற்கு கொண்டு
வந்து எங்கள் வீடுகளில் வைத்து உங்கள்
மடியினில் இருந்து விளையாட
விரும்பினோம் அம்மப்பா அப்பப்பா
ஏன் அப்பப்பா ஏன் அம்மப்பா தர்மதேவன்
இந்த நீதியின் தேவளை அழைத்து சென்று விட்டான்
உங்களின் நேர்மையினையும் நீதியினையும்
எல்லோரும் கூற நாங்களும் கேட்டு
அழுகின்றோம் அழுகின்றோம்
உங்களின் பிரிவால் அழுது அழுது கொண்டிருக்கும்
பேர பிள்ளைகள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
முத்துமாரி அம்மாவை வேண்டி நிற்கின்றோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெறாமக்களின் உணர்வலைகள்

பெருந்தகையே பேராசானே எங்கள் பெரியப்பாவே
குணக்குன்றே குணவாளனே எங்கள் குஞ்சய்யாவே
அறிவுடையோனே அன்பாளனே எங்கள் ஆசையப்பாவே
சிங்கார வேலனே சீர் மாறனே எங்கள் சித்தப்பாவே
பெரியப்பா, குஞ்சய்யா, ஆசையப்பா,
சித்தப்பா என அழைத்திருந்தோம்
உங்களைக் கண்டவுடனெ பாசத்துடனே பணிவும் வரும்
உங்களின் உறவும் உள்ளின் நேர்மையும்
உங்களின் நீதியும் உங்களின் நியாயமும்
எங்களை உருக வைக்கின்றதோ
பெரியப்பா
சிங்கார சிரிப்பும் சீர்மிகு நடையும் அன்பான
நடையும் அனைவரையும் கவருமே
குஞ்சையா குஞ்சையா என ஓலமிட்டு அழுகின்றோம்
ஒருமுறை ஓடி வர மாட்டிங்களா குஞ்சையா
காதுகளில் வந்த செய்தி பொய்யாகாதோ
காலனவன் செய்த வேலை பொய்யாகாதோ
காசினியில் நீங்கள் வாழ்ந்நத வாழ்வு மெய்யன்றோ
காலம் தோறும் உங்கள் நினைவு நெஞ்சில் நிலைக்கும் அன்றோ
உங்கள் நினைவுகள் எங்கள் நெஞ்சினிலே வாழும் அப்பா
உங்கள் ஆத்மா சாந்தி பெற சுட்டபிட்டி
அம்மாளை வேண்டி நிற்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகோதரர்கள்

தாயின் வயிற்றினிலே உதிரத்தால் ஒன்றுபட்டோம்
தந்தையின் வளர்ப்பினிலே உள்ளத்தால் ஒன்றுபட்டோம்
வீட்டில் இருக்கையினிலே உறவால் ஒன்றுபட்டோம்
வீதியில் செல்கையிலே பாசத்தால் ஒன்று பட்டோம்
பள்ளியில் இருக்கையிலே படிப்பால் ஒன்றுபட்டோம்
தோட்டத்தில் நிற்கையிலே தொழிலில் ஒன்றுபட்டோம்
வயலில் நிற்கையிலே வனப்புடனே ஒன்றுபட்டோம்
தம்பி என்றும் அண்ணாவென்றும் சேர்ந்தும்
பிரிந்தும் அடித்தும் அணைத்தும் அன்பு
கொண்டும் வாழந்திருந்தோம்
ஓர் கொடியில் பல கனிகள் ஒன்றாக
இருக்கையிலே இரு கனி உதிர்ந்து விட்டதுவே
தம்பி தம்பி என அலறுகின்றோம்
அண்ணா அண்ணா என ஓலமிட்டு அலறுகின்றோம்
எமதர்ம ராஜா எங்கள் சகோதரனை
எங்களை விட்டு பிரித்து விட்டானே
ஐயகோ ஐயே ஐயோ
என்ன செய்வோம் என்ன செய்வோம்
எங்கள் சகோதரனின் ஆத்மா
ஐங்கரப் பெருமானின் திருவடியில் சாந்தி பெற
வேண்டி நிற்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மச்சான், மச்சாள், உறவுகள் மன குமுறல்

மச்சானே மச்சானே என்று மாண்புடனே அழைத்திருந்தோம்
ஓர் மரக்கனிகளாக வாழ்ந்திருந்தோம்.
மாடு கன்று, மேய்த்து வந்தும் வயல்,
வரம்பில் நடந்து வந்தும் பால் கறந்து
கொண்டு வந்தும் பகல் இரவில் காவல் புரிந்திருந்தும்
பள்ளிதனில் சென்று படித்து வந்தும் பண்புடனே
வாழ்ந்து வந்தோம். எந்த உறவை நினைப்பது எந்த
செயலை மறப்பது மச்சான் என்று அழைத்தவுடன்
என்னடா என்று உரைத்த குரலில் அழைப்பாயே
இன்று அந்த குரல் எங்கே மச்சான் சென்றது
அத்தான் அத்தான் என அன்புடனெ
அழைத்திருந்தோம் அக்கா அழும் குரல்
இதுவரையும் கேட்கவில்லையா
அத்தானெ ஆசை அத்தானே நீங்கள் செய்த உதவிகளால்
நீங்கள் செய்த சேவைகளால் இன்று நாங்கள் வாழ்கின்றோம்
உங்களை எங்களால் மறக்கவே முடியவில்லை
காலனவன் உங்கள் உயிரை கவர்ந்து எடுத்து
விட்டான். பிரியமுடியாது பிரிந்து விட்டீர்களெ அத்தான்
உன் பிரிவு கண்டு உறவுகள் துடிக்கின்றன
என்ன செய்வோம் ஏது செய்வோம் எல்லாம் விதியின்
பலன் இவ்வுலகில் நாம் இருக்கும் வரை உம்
நினைவு எம்மை தொடரும் உம் ஆத்மா
சாந்தி பெற அம்பாளை அனுதினமும் வேண்டுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரிய அண்ணாவின் இதயக் குமுறல்

உடன் பிறப்பே, உயிரின் துடிப்பே, கடின உழைப்பாளியே, களங்க மில்லாத உள்ளத்தவனே, கடமை வீரனே, கனவானே, தம்பி கனகுவே. சிறு வயது முதல் இன்று வரை என்னுடனேயே வாழ்ந்து வந்தாய். என் வாழ்வின் இன்பத்திலும் துன்பத்திலும் இணைபிரியாது தொடர்ந்து வந்தாய்.

ஆறில் இருந்து அறுபத்தாறு வரைக்கும் அல்லும் பகலும் அண்ணா அண்ணா என்றும் அமைதியாக அழைத்துக் கொண்டு அல்லும் பகலும் உழைத்து நின்றாய். அத்தனை சகோதரங்களும் வெளிநாடு சென்ற பின்பும் நீ மட்டும் என்னுடனே நிலைத்து நின்றாய். நிமிர்ந்து கதைக்கமாட்டாய், திருப்பி உரைக்கமாட்டாய், எதைக் கூறினாலும் மௌனம் என்ற ஒன்றே வார்த்தையாக வரும் ஐய்யா அம்மாவிடம் இருந்த காலத்திலும், குடும்பமாக வாழ்ந்த காலத்திலும் பிள்ளைகளுடன் மகிழ்ந்த காலத்திலும் எனக்குப் பக்கத்திலே வீடு கட்டி வாழ்ந்தாய். திருமணம் நிச்சயிக்கப்படும் போது நீ விரும்பியவளையே செய்து வைப்பிச்சேன்.

நீ என்ன கேட்டாலும் அன்று தொடக்கம் இன்று வரைக்கும் அத்தனையையும் செய்து தந்தேன். நீ என்னை பாதுகாப்பாய், காப்பாற்றுவாய், இருப்பாய் என்றல்லவா நினைத்திருந்தேன். வயல் பார்ப்பதற்கும், மாடு கன்று மேய்ப்பதற்கும், பால் கறப்பதற்கும் சென்று வருவாய். பத்து நிமிடங்கள் வரத்தவறினால் எங்கே நிற்கின்றாய் என தொலைபேசியில் கேட்டால் இதோ வருகிறேன் எனக் கூறி உடனே வந்துவிடுவாய். உனது மனைவி, உனது பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் படும் வேதனைகளை தாங்கமுடியவில்லையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தண்ணீரில் நீ விழும் போது நீ என்ன நினைத்திருப்பாய் என எண்ணும் போது நெஞ்சு வெடிக்கின்றது, இதயம் துடிக்கின்றது. என்ன செய்வேன் நீ செய்த உதவிகள், வேலைகள் எல்லாம் என் கண்முன்னே வருகின்றன. எண்ணி எண்ணி அழுகின்றேன். ஏங்கி ஏங்கி அழுகின்றேன். தம்பி கனகு உன்னை விட்டு என்னால் பிரிந்து இருக்க முடியவில்லையே. உனது ஆத்மா சாந்தி பெற எல்லாம் வல்ல பிள்ளையாரை வேண்டி நிற்கின்றேன்.

திரு. வி. முத்துலிங்கம்
பெரிய அண்ணா

**வெற்றியின் ரகசியம்..!**

புத்தகங்களை துணைகொள்..
உடலுழைப்பை அதிகரி
குளிர் நீரில் குளி
கொஞ்சமாய் சாப்பிடு.
இரவு உறங்கும் முன்
நெடுந்தொலைவு நட..
உணவில் கீரையை சேர்த்துக்கொள்
எத்தனை வலித்தாலும் அழாதே.. சிரி
ஆத்திரம் அகற்று..
கேலிக்கு புன்னகை தா.
கோபத்திற்கு மௌனத்தைக் கொடு.
அலட்சியப்படுத்தினால் விலகி நில்.
அன்பு செய்தால் நன்றி சொல்.
இதமாகப் பேசு..











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூத்த மகனின் நீங்காத நினைவுகள்

அன்புள்ளம் கொண்ட எங்கள் அப்பா
ஆசையுடன் அரவணைத்து அறிவுதனை தந்தீர்கள்
இன்பமான சொல்லுரைத்து இதயத்தில் பாசம் தனை வளர்த்தீர்கள்
சின்னஞ்சிறு வயதினிலே மடி மீதும் தோள் மீதும்
சுமந்து என்னை மகிழ்வுடனே வளர்த்தீர்கள்
பாடசாலை செல்வதற்கும் வீடு வந்து சேர்வதற்கும்
பாத்திருந்து காத்திருந்து பக்குவமாய் வளர்த்தீர்கள்
அன்புத் தங்கை ராசாத்தி ஆருயிர் தம்பியர் சுரேஸ், லோகேஸ், பகி
அனைவரையும் ஒரு கொடியின் மலர்கள் என ஒன்றாகவே வளர்த்தீர்கள்
என்ன உணவு கேட்டாலும் எந்த நேரம் என்றாலும் அந்த உணவு
அம்மாவிடம் வந்து சேரும் அப்பாவால்
அப்பா எங்கே எனக்கேட்டால் பட்டிக்கென்றும், வயலுக்கென்றும்,
தோட்டத்திற்கென்றும் அம்மாவின் வாயிலிருந்து விடைதான் வரும்
பசுப்பாலை கொண்டு வந்து பானையிலே காச்சி எடுத்து அரிசிமா
பிட்டிற்கு ஆடையுடன் ஊற்றிய அந்த நாளை நினைப்பதா
இறைச்சி என்று கேட்டவுடன் ஈரலும் இறைச்சியுமாய் கொண்டு வந்து
கறி சமைத்து சோறினை ஊட்டிய அந்த நாளை நினைப்பதா
கஸ்ரமென்றால் என்னவென்று கணப்பொருளும் அறியாமல்
வளர்த்துவிட்ட அந்த நாளை நினைப்பதா
ஈரொன்பது ஆண்டுகளில் இந்த நாட்டின் பிரச்சினைகளால் வெளிநாடு
செல்ல வைத்தீர்களே அந்த நாளை நினைப்பதா
உடன் பிறப்புக்கள் மூவரையும் வெளிநாடு அனுப்பிய பின் ஓர் உறவை
உங்களுடன் வைத்தீர்களே அந்த நாளை நினைப்பதா
எங்களின் வாழ்வினிலே கலங்கரை விளக்காக திகழ்ந்தீர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களை முழு நிலவாக ஒளி வீச வைத்தீர்கள் வெளிநாட்டில் இருந்து எதைக் கேட்டாலும் எங்களுக்காய் வாங்கி அனுப்பினீர்கள் நீங்கள் என்னிடம் எதையுமே கேட்கவில்லையே அப்பா! நான் கேட்டாலும் வேண்டாம் என்ற ஒரு வார்த்தை தான் தொலைபேசியில் வருமே அப்பா உழைப்புத்தான் உங்களது உயிர்மூச்சு அதுவே இறுதிமூச்சாக வருமென்று எதிர்பார்க்கவில்லை அப்பா. மூன்று ஆண்டுகளின் முன் தம்பி திருமணத்திற்கு வந்தபோது தம்பிகள், தங்கை, அம்மா எல்லோரையும் நீதான் கவனமாக பார்க்க வேண்டும் என்று சொன்னீர்கள் அப்பா. திடீர் என எங்களை விட்டு பிரிவீர்கள் என நினைத்தா கூறினீர்கள். எனது நெஞ்சம் வெடிக்கின்றது. இதயம் துடிக்கின்றது. நீதியின் காவலனே, நேர்மையின் பிறப்பிடமே, தூயவனே, தூண்டா மணிவிளக்கே, குலம் காத்து நின்ற குல விளக்கே. தவம் இருந்து பெற்ற தவக்கொழுந்தே எத்தனை பிறவிகள் நான் எடுத்தாலும் அத்தனை பிறவிகளும் நீங்களே எனக்கு தந்தையாக வர இறைவனை வேண்டுகின்றேன்.

உங்கள் உயிர் உங்களை விட்டு பிரிந்து சென்றாலும் உங்கள் நினைவுகள் எங்களை விட்டு என்றென்றும் நீங்காது உங்கள் ஆன்மா சாந்தி பெற கற்பக விநாயகப் பெருமானின் திருவடியினை வேண்டி நிற்கின்றேன்.

அருமை மகன் லிங்கன்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசை மகளின் அன்பு அலைகள்

ஆறாத்துயருடன் அழுது வண்ணம் அன்புடன்
அழைக்கின்றேன் அப்பா
மீளாத்துயர் எங்களிற்கு வந்து விட்டதே அப்பா
ஒரே ஒரு மகளாக பிறந்த போது கோகிலவர்த்தனி
என பெயரிட்டு ராசாத்தி என அன்போடு அழைத்தீர்களே
அப்பா
அன்று தொடக்கம் இன்று வரைக்கும் ராசாத்தியாகவே
வாழ்கின்றேன் அப்பா
சின்ன வயதில் என்னை மடிமீது வைத்து பசுப்பாலும்
பிட்டும், பாலும் சோறும் பழங்களும் தந்து ஊட்டி
வளர்த்தீர்களே அப்பா
தங்கச்சி தங்கச்சி என் கச்சிதான் என
அன்போடும் பகிடியாகவும் அழைப்பீர்களே அப்பா
என்னை இல்லற வாழ்வில் இணைத்து மருமகனுடன்
இங்கிலாந்து தேசத்திற்கு அனுப்பும் போது நீங்கள்
பட்ட நிலையினை எண்ணி அழுகின்றேன் அப்பா
அனிக்காவும், அவிநெசும் பேரப்பிள்ளைகளாக வந்த
போது நீங்கள் அடைந்த மனமகிழ்வினை
எண்ணி நிலைகுலைகின்றேன் அப்பா
நீங்கள் எனக்காக செய்த தியாகங்கள், எனக்காக
செய்த சேவைகள், எனக்காக உழைத்த உழைப்புக்கள்
என்றும் என் இதயத்தை விட்டு நீங்காதே அப்பா
தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் உங்களை
பார்ப்பதற்காய் பேரப் பிள்ளைகளுடனும் மருமகனுடனும்
வருவேன் அம்மாவும் அப்பாவும் தம்பியும்
மகிழ்வுடன் இருப்பதைக் கண்டு மகிழ்வு கொள்வேன்
மூன்று ஆண்டுகளிற்கு முன்பு தம்பி
பகியின் திருமணத்தின் பொழுது ஒரு தந்தையின்
கடமையை எவ்வாறு செய்தீர்கள் என
நினைத்து நினைத்து இன்புற்றேன் அப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரன் பிரணவனுடன் எவ்வளவு மகிழ்ச்சியாக,
இன்பமாக, சந்தோசமாக இருந்தீர்கள் அப்பா
ஒரு மாதத்திற்கு முன்பு நாங்கள் வந்த போது
எங்களை வாரி அணைத்து முத்தமிட்டு பேரபிள்ளைகளை
கட்டியணைத்து மடியில் வைத்து மகிழ்ச்சியாய்
இருந்தீர்களே அப்பா
பணம் எடுப்பதற்காய் என்னை கேட்காமல்
ஏன் அப்பா கையொப்பம்
போட்டீர்கள் என்று கேட்டபோது ஒரு சிரிப்பு
சிரித்தீர்களே அப்பா
அந்த சிரிப்பு ஒளி மறையும் முன்னே சிரசு
வெடிக்கும் செய்தி வந்ததுவே அப்பா
காலதேவன் ஒரு கணப்பொழுதினிலே பௌர்ணமி
நிலவாக ஒளி வீசிய எங்கள் காவல்
தெய்வத்தின் உயிரை கவர்ந்துவிட்டான்
என்ற செய்தி காதுகளை பிளந்தன
உலகமே இருண்டது உள்ளம்
அழுதது கண்ணீர் சொரிந்தது அப்பா அப்பா என
அழுதேன் துன்புற்றேன் துவண்டு விழுந்தேன்
ஓடோடி வந்தேன் அப்பா உங்களது
வதன முகத்தைக் கண்டேன் அப்பா
அம்மாவின் கோலம் என்னை இன்னும் அழ
வைத்தது தாங்க முடியாது தவிக்கின்றேன்
விதியின் செயலை எண்ணி அழுகின்றேன்
உங்களைப் போலொரு அப்பா நான் எத்தனை
ஜென்மம் எடுத்தாலும் எனக்கு வர வேண்டும்
என வேண்டுகின்றேன்
இறைபதமடைந்த உங்கள்
ஆத்மா சாந்தி பெற இறைவனை வேண்டுகின்றேன்

அன்பு மகள்
ராசாத்தி ஜெயக்குமார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பா

வெளிநாடு வருகையிலே நினைக்கவில்லை
உன்னோடிருக்கும் நான் இனி என்
வாழ்வில் இல்லை என்று

அப்பா உன்னை விரைவில் என் பிள்ளைகளோடு
வந்து பார்க்க போகிறேன் என்ற
ஆசையில் நினைத்தேன்

நீங்கள் எம்மை விட்டு பிரிந்தாய் என்ற
செய்தி இடியாய் இறங்கியது எனக்குள்
என் ஆசைகள் அனைத்தும் தவிடுபொடியாகிறது

உங்களுடன் கதைக்க நினைத்த விடயங்களும்
சேர்த்து வைத்த ஆசைகளும் ஏராளமானதப்பா
அவையெல்லாம் உங்களை வந்து சேருமுன்
காத்திருக்க காலமின்றி சென்றது தான் ஏனப்பா!

எங்கு அழைத்தாலும் வயல், பட்டி என்று
கூறி செல்ல மறுப்பாயே அப்பா – ஆனால்
இன்று மட்டும் செல்ல துணிந்தது ஏனப்பா

அப்பா உன்னை பார்க்க முடியவில்லை என்ற வேதனையை
என்னவென்று சொல்லி ஆற்றிடுவேன்
ஒரு தடவை கூட பார்க்கும் முன்
காலம் பிரிந்ததே நிரந்தரமாய் எம்மிடமிருந்து சென்றாய்

வலிக்கிறது இதயம் மட்டுமல்ல
நீயில்லா உலகில் வாழும்
இந்த வாழ்க்கையும் தான் அப்பா

உன் பிரிவை ஏற்க மறுக்கும்
உன் அன்பு மகன்
துரேஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகன் லோகேஸ்

சிரித்த முகமும் சிங்கார நடையும் சுயநலம் இல்லா சேவையும் கொண்ட எனது அருமை அப்பாவே. அம்மாவின் அரவணைப்பில் இருந்து ஆளுமை உள்ள ஒருவனாக நான் வளரும் வரைக்கும் நீங்கள் ஆற்றிய சேவைகள் ஆயிரம் ஆயிரம். துள்ளி விளையாடும் போதும். பள்ளிக்கு செல்கையில் இருந்து வருகையிலும் பாடங்கள் கற்கும் போதும் பகிடிக் கதைகள் கூறி மகிழவைப்பீர்களே அப்பா. வேண்டாத செயல்கள் செய்தால் வெகுண்டு எழுவீர்களே அப்பா. வேதனைகள் எல்லாவற்றையும் மனிதினிலே அடக்கி வேலைகளிலே ஈடுபடுவீர்களே!

அப்பா எனக்காக எத்தனை துயரங்களை மனதிலே வைத்து இடம் பெயர்ந்து செல்கையிலே நிழல் போல பின் தொடர்ந்து வந்தீர்களே அப்பா. ஊன் இன்றி, உறக்கம் இன்றி பகல் என்றும் இரவு என்றும் மழை என்றும், பனி என்றும் பாராது என்னை பாதுகாத்து வெளிநாடு அனுப்புவதற்கு கடினமாக உழைத்தீர்கள் அப்பா. எனக்கு ஏற்பட்ட காயத்தினை மாற்றுவதற்கு எத்தனை தியாகங்கள் எத்தனை செயல்கள் அவைகளை எண்ணி எண்ணி அழுகின்றேன். அப்பா எனக்காக தந்த உணவுகளை உடைகளை உங்கள் கரங்களினால் என்னை அரவணைத்து முத்தமிட்டு வழி அனுப்பிய செயல்களை என் கண்ணீராக பெறுகின்றது. அப்பா அன்னிய நாட்டிலே எனக்கு திருமணம் நடைபெற்ற போது மகிழ்ச்சியாய் இருந்து ஆனந்தம் கொண்ட முகத்தினை எண்ணி பார்க்கின்றேன். எனது ஆசை நிறைவேறாமல் போய் விட்டதே அப்பா. எனது குழந்தையினை உங்கள் மடி மீது வைத்து முத்தமிட்டு உறவாடுவீர்கள் என எதிர்பார்த்திருந்தேன். என் அப்பா எங்களை விட்டு தூரப்பயணம் செய்தது ஏனோ?

நாங்கள் இருந்த மகழ்ச்சிகரமான வாழ்வு கடவுளுக்கும் பொறுக்கவில்லை. உழைப்பே உங்கள் உயிர் நாடி அதுவே உங்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரை எடுக்கும் இறுதி வினாடி கணகத்தில் நடந்து வந்தால் காடே நடுங்கும். நீரிலே நீந்தி வந்தால் நீரே வழிவிடும் அப்படிப்பட்ட உங்களுக்கு இந்த நிலை உங்களின் பிரிவுத்துயர் கேட்ட போது நா வரண்டு விட்டது. வாய் பேச மறுத்து இழந்தன. கால்கள் நடக்க மறுக்க கைகள் செயல் இழந்தன. உலகமே அழிவதை போன்ற ஒரு கணப்பொழுது இனி எங்கே காண்பேன்.

அது உங்களுக்கு கேட்காது ஆண்டவனிடம் கேட்கின்றோம். ஏழு ஏழு பிறவியிலும் நீங்களே என் அப்பாவாக வரவேண்டும் பிரிந்த உங்கள் ஆத்மா என்றும் எங்கள் பிள்ளையாரின் திருப்பாதம் அடைய வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி!

மகன்
லோகேஸ்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தந்தையே

வயல் வெளியே வரப்பும்
வளர்ப்பு பட்டி மாடும் தோட்டமும்
வருமானம் பெற தினமும்
வருந்தி உழைத்த வள்ளலே
கள்ளியடியினிலே துள்ளி திரிந்த காளை
காதினிலே வந்து இடி விழுந்த வேளை – அடுத்த
கணப்பொழுதில் இதயம் நின்று போனதே – அப்பா
காலனுக்கும் உங்களை பிடித்துப் போனதே..
கண்ணின் மணி போல
கடைக்குட்டியின் முதல் குட்டியை – பிரணவன்
பிரபஞ்சத்தின் பிடியிலே உங்களது மடியிலே
பிராணமே எனது மகன் பிரணவனே
மகனின் மனைவியை கீர்த்தி
மகளாய் ஏற்று தினமும் என்னை
மனம் குளிர போற்றிய எனது தந்தையும்
மாமாவும் இன்னொரு தந்தையுமே..
நடந்தவையெல்லாம்
கனவாகாதோ என மனமேங்குதே
நாளும் பொழுதும் – உம் நினைவுகளில்
நாம் வாழும் காலம் வரை தந்தையே...

துயரின் பிரிவில்
மகன் – பகி
மருமகள் – கீர்த்தி
பேரன் – பிரணவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூத்த மருமகள்

பாசத்துடன் பகிடியாக பெரிசு என அழைக்கும் ஆசை மாமாவே. மூத்த மருமகளாக எண்ணாது மூத்த மகளாக எண்ணி வாழ்ந்தீர்கள். கதைக்கின்ற வேளை எல்லாம் எளிமையாகவும் பகிடியாகவும் பண்புடனும் கதைப்பீர்கள் மாமா. நேரடியாக மூன்று முறை உங்களிடம் வந்தேன் மூபத்து ஆண்டுகள் பழகிய முழு நிலவாக என் முன்னே ஒளி வீசுகின்றீர்கள் மாமா. எதைக் கேட்டாலும் கண்ணபெருமான் போல் ஓர் சிரிப்பு. எதைச் சொன்னாலும் கார்முகில் வண்ணனைப் போல் ஒரு மௌனம். ஆனால் காவல் செய்வதில் ஐயனார் தான் நீங்கள். இன்று உங்கள் மூத்த மகன் பார்த்து பார்த்து ஏங்கி ஏங்கி எண்ணி எண்ணி அழுகிறார். அப்பப்பா அப்பப்பா என இலக்கியனும் கீர்த்திகாவும் அழுகின்றனர். நான் எப்படி ஆறுதல் கூறுவது மாமா. உங்களின் உழைப்பே எங்களின் உயிர்நாடி உங்களின் நேர்மை, நீதி, நியாயம், இந்த மூன்றுமே எங்களது வாழ்வின் லட்சியம். இதுவே நாங்கள் உங்களுக்கு செய்யும் முதல் மரியாதை. இவ் உலகை விட்டு பிரிந்து சென்ற உங்களுடைய ஆத்மா சாந்தி பெற வயல் பிள்ளையாரை வேண்டுகின்றேன்.

மூத்த மருமகள்
ரதி

**நான் மெதுவாக நடப்பவன்தான்;**
**ஆனால், ஒருபோதும்**
**பின்வாங்குவதில்லை.**

**- Abraham Lincoln.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசை மருமகன்

மாமா மாமா என மகிழ்வாக அழைப்பேன்
வந்து நின்று  மௌனமாக பார்ப்பீர்கள்
அப்பா சென்ற பின்பு அம்மாவினை பார்த்து இருந்தீர்கள்
அனிகா அவினேஸ்சினை அன்புடனே வளர்த்தீர்கள்
வெளிநாட்டில் இருந்து வந்தவுடன் ஓடி வருவீர்கள்
இனியார் மாமா எங்களிடம் வரப் போகிறார்களோ மாமா
ராசாத்தி படும் வேதனைகளை மாமி படும் துயரங்கள்
என் பிள்ளைகள் அம்மப்பா, அம்மப்பா என அழுது
கண்ணீர் விடும் செயல்கள் நினைக்க நினைக்க நெஞ்சு
வெடிக்கின்றது.  உங்கள் அன்பை நினைப்பதா அறிவுரைகளை
நினைப்பதா செயல்களை நினைப்பதா சேவைகளை நினைப்பதா
நல்லவர்கள் இந்த உலகில் நீண்ட காலம் வாழ
இறைவனுக்கு விருப்பமில்லை போலும் நாட்கள் பல
நகர்ந்தாலும் நானிலத்தில் நல்ல உள்ளம் உங்களை
நாங்கள் மறக்கவே மாட்டோம் மாமா
கணப்பொழுதில் இவ் உலகை விட்டு சென்று விட்ட
உங்கள்ஆத்மா கற்பக விநாயகரின்
திருவடியை அடைய வேண்டி நிற்கின்றேன்

ஆசை மருமகன்
குமார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமகள்

மருமகளாய் உங்கள் வீட்டிற்கு வந்த
போது மகளாய் அரவணைத்தீர்கள்
மாமா என்ற உறவை தாண்டி
அப்பா என்றழைக்கும் எண்ணம் தந்தீர்களே
அம்மா என்று அழைப்பீர்களே அப்பா
என்றும் கேட்டதில்லை என் பெயர் சொல்லி
அழைத்ததை எங்கு சென்று தேடிடுவேன்
உங்களை அன்பை என் வாழ்வில் எங்கு தேடுவேன்
பட்டி சென்று வருகையிலே காலன் தன்னை
அழைத்து செல்ல காத்திருந்ததை
அறிந்தீர்களா அப்பா!
ஒரு முறை கூட நினைத்ததில்லையே கனவிலும்
கூட காலம் உங்களை வெகு விரைவில்
நிரந்தரமாய் பறித்திடும் என்று
நீங்கள் இல்லை என்பதை ஏற்க மறுக்கிறது
இதயம் ஒவ்வொரு வினாடியும் கனக்கிறது வலியினால்.
அப்பப்பா என்று கேட்கும் என்
பிள்ளைகளிடம் என்னவென்று சொல்லிடுவேன்
அவர்கள் அப்பப்பா என்றழைக்கவும்
மடிமீது ஏறி விளையாடவும்
கரம் பிடித்து உங்களோடு கதைபேசி
சுற்றி வரவும் அவர்கள் கண்ட கனவையெல்லாம்
கனவாகவே விட்டு விட்டு
நிரந்தரமாய் மறைந்தீர்களே அப்பா
காலனவன் அழைத்தாலும் மறுக்க வழியின்றி
செல்ல துணிந்தீர்களே அப்பா
இன்று உங்கள் பிரிவை ஏற்க
வழியின்றி தவிக்கிறது இதயம்

மருமகள்: சுபா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசை மாமாவே எங்கே போனீர்கள் நீங்கள்

ஆசைமாமா உங்களை நினைத்து எழுதத்தொடங்கும் போது கண்களில் இருந்து கண்ணீர் மட்டுமே வருகிறது மாமா. நாங்கள் எதை எழுதுவோம். நீங்கள் எங்கள் மீது வைத்த பாசத்தையா இல்லை நாங்கள் உங்கள் மீது வைத்த பாசத்தையா. அதுக்கு ஈடு இணை இல்லை மாமா. நாங்கள் நினைக்கவில்லை மாமா நீங்கள் எங்கள் கூட செய்த குறும்புகள், விளையாட்டுக்கள் இப்படி பேப்பரில் எழுத வைப்பீர்கள் என்று நினைக்கவில்லை மாமா.

ஆசைமாமா நீங்கள் திரும்ப வரமாட்டீங்களா என் மனம் துடிக்கின்றது. ஆசைமாமா நான் எத்தனை கனவுகள் கண்டு இருந்தேன் மாமா ஏன் மாமா இப்படிச் செய்தீர்கள். நாங்கள் நினைக்கவில்லை ஆசைமாமா நீங்கள் எங்களை பாதியில் விட்டு செல்வீங்க எண்டு. நான் ஏதோ ஏதோ எல்லாம் நினைத்துக் கொண்டிருந்தேன் ஆசை மாமா எல்லாம் வேறும் கனவாகமட்டுமே மாறி விட்டது. உங்களிடம் நாான் போனில் பேசிய போது கூட என்னை மருமகளாக பார்க்காமல் உங்கள் மகள் போல் பேசிவீங்க எல்லாமே சொல்லுவீங்களே. மாமி கூட சொல்லி நக்கல் பண்ணுவீங்க நான் சிரிக்கட்டும் எண்டு ஆனா அண்டைக்கு நான் நல்ல சிரிச்சிட்டன் போல மாமா இண்டைக்கு அதை எல்லாம் நினைக்கும் போது அழுகதான் வருகிறது மாமா. எனது பிறந்தநாளைக்கு தவறாமல் போன் பண்ணுவிங்கள். மாமா நான் அதுக்காக காத்து கொண்டிருப்பேன். மாமா என்னை எப்படி றுளைா பண்ணுவிங்கள் மாமா "தங்கச்சி பெத்த ரத்தினத்துக்கு பிறந்தநாள் வாழ்த்துக்கள்" எண்டு சொல்லுவீங்களே மாமா எனி யார் மாமா அதை சொல்ல போறாங்க நீங்கள் சொன்ன சந்தோஷத்தில் நான் வீட்டில் எல்லோருக்கும் சொல்லுவன் மாமா அம்மா எல்லோருமே சிரிப்பாங்க. அதை கேட்டு மாமா ஆசை மாமா என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்தை யாரலும் நிரப்ப முடியாது எங்களுக்கு மாமா உங்களைப் பற்றி எழுதுவதற்கு இந்த பேப்பர் காணாது மாமா. மாமா என்று சொன்னாலே வீட்டில் ஆசை மாமா என்று தான் கேப்பம். எல்லோரும் ஏன் மாமா இப்படி செய்தீங்க எங்க மாமா எங்களை விட்டு போனீங்க எங்கள் வீட்டுக்கு காலை இரவு என்று ஒவ்வொரு நாளும் தவறாமல் வருவீங்களே மாமா எங்கள் அம்மாவை தங்கச்சி எண்டு கூப்பிட்டுக்கொண்டே வருவீங்களே. மாமா எனி யார் மாமா கூப்பிடபோறாங்க சொல்லுங்க மாமா. உங்கள் குரல் என் காதுகளில் என்னமும் கேட்டுக்கொண்டே இருக்கின்றது. மாமா நீங்கள் இருக்கிறீங்க மாமா என்று என் மனம் சொல்கிறது. அடிக்கடி எங்களோடு வந்து விடுங்க ஆசை மாமா எங்களால் நினைத்து பார்க்க முடியவில்லை நீங்கள் இல்லாத இந்த உலகை மாமா.

மருமகள்
ம[illegible]ரி லோகேஸ்

**நீ எதை நினைக்கிறாயோ**
அதுவாகவே ஆகிறாய்.
**நீ உன்னை வலிமையுடயவன்**
**என்று நினைத்தால்**
வலிமை படைத்தவன் ஆவாய்.
**உன்னால் சாதிக்க இயலாத காரியம்**
**என்று எதுவும்** இருப்பதாக
ஒருபோதும் நினைக்காதே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரம் கொண்ட என் அம்மப்பா

வாழ்க்கையில் மிகவும் சோகமான நிகழ்வுகளில் ஒன்று நாம் நேசிக்கும் மற்றும் அறிந்தவர்களை இழப்பது. அம்மப்பா உனது இழப்பு என்னை விட்டு திரும்ப முடியாத பெரும் பகுதி என்னிடமிருந்து பிரிந்தது போல் மிகவும் மனச்சோர்வை ஏற்படுத்தியது அம்மப்பா. உங்கள் புன்னகை சூரிய ஒளியால் ஆனது. உங்கள் இதயம் திடமான தங்கத்தால் ஆனது. அந்த உரையாடல்கள், சிரிப்புகள் மற்றும் அரவணைப்புக்கள் அனைத்தும் மீண்டும் உயிர்ப்பிக்கப்படாது என் இதயத்தில் பாதுகாப்பாக மறைந்திருக்கும் அம்மப்பா. உங்களைப் பற்றிய அழகான நினைவுகள் எனக்கு நிறைய உள்ளன. கடற்கரைக்கும், கோயிலுக்கும் சென்ற நேரம் போன்றவை நான் சின்ன வயசுல இருந்தே என்னை செல்லம் என்றுதான் அழைப்பீர்கள்.

உங்கள் குரல் எப்போதும் அறையை ஒளிரச் செய்யும். குட்டி மாமாவின் திருமணத்திற்காக நான் வந்த பொழுது எப்போதும் உங்கள் மடியில் எப்படி உறங்குவேன் என்பது எனக்கு நினைவிருக்கிறது. உங்கள் தொடுதல் எனக்கு எப்போதும் உங்கள் மீது பாச உணர்வைத் தரும். நீங்கள் எவ்வளவு வேலை செய்தீர்கள் என்பதை எப்போதும் எனக்கு நினைவூட்டும்.

ஆனால் இன்னும் அதிகமாக நினைவூட்டும். ஆனால் இன்னும் அதிகமாக உங்கள் ஆர்வம். சமீபத்தில் 2021 கோடை விடுமுறையில் நான் உங்களை பார்க்க வந்தபோது நீங்கள் என்னை (பசுவின் விஷயத்திற்கு) அழைத்துச் சென்று அனைத்து மாடுகளையும் குறிப்பாக நீங்கள் என் பெயரைப் பெற்ற மாடுகளையும் எனக்கு காட்டியது எனக்கு நினைவிருக்கிறது. நீயும் நானும் எப்பொழுதும் பிரவாணனுடன் விளையாடுவதை நான் நினைவுகூர்கின்றேன்.

மதியம் நாங்கள் இரண்டு கதவுகளையும் பூட்டிவிடுவோம். அதனால் அம்மப்பாவை விட்டு வெளியேற முடியாமல் அவரை கிண்டல் செய்வோம். நாங்கள் ஒன்றாக கூழ் செய்தபோது நீங்கள் (இலைப்பொருள்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்ததை நான் பார்த்த நிகழ்வை நான் நினைவுபடுத்துகின்றேன். என் அச்சமில்லாத அம்மப்பாவவுக்கு ஒரு போதும் சுய கவனம் பிடிக்கவில்லை. அவர் எப்போதும் தனது குடும்பத்தின் மீது கவனம் செலுத்துவார். ஏனென்றால் குடும்பம் என்பது அம்மப்பாவுக்கு எல்லாமே. காரணம் அம்மப்பா உங்கள் சுயநலமின்மை என்றும் மறையாது எங்கள் அனைவரின் இதயத்திலும் நீங்கள் இருப்பதால். அம்மப்பா கோடை விடுமுறைக்கு பிறகு கிளம்பும் போது என்னிடம் bye சொல்லாமல் கிளம்பி விடுவாய் என்று நான் நினைத்தது. கிளம்பிடுவாய் என்று நான் நினைத்து கூட பார்க்கவில்லை. அம்மப்பா உங்கள் அன்பும், வீரமும், விவேகமும் எங்கள் நெஞ்சில் என்றும் பூட்டி வைக்கப்படும். அம்மப்பாவை நாங்கள் எப்போதும் நினைவில் வைத்திருப்போம். ஏனென்றால் எங்கள் இதயத்தில் உங்களுக்கு பதிலாக யாரும் இருக்க மாட்டார்கள். உங்கள் மீது நான் வைத்திருக்கும் அன்பு ஒரு போதும் மலராது.

ஓம் சாந்தி!

அனிகா ஜெயக்குமார்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பப்பா

அன்புள்ள அப்பப்பா 2011இல் எனக்கு 3 வயதாக
இருந்த போது தான் உங்களை
முதன் முதலில் பார்த்தேன்
உங்களைப் பார்க்கும் போது
எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக
இருந்தது. ஒவ்வொரு முறையும் நினைக்கும் போது என்
முகத்தில் ஒரு புன்னகை மோட்டார் சைக்கிள் ஓட்டுவது
எப்படி என்று நீங்கள் எனக்கு கற்றுக் கொடுத்த போது
உங்களுடன் எனக்கு மிகவும் பிடித்த தருணங்கள்,
ஆனால் துரதிஷ்டவசமாக நான் சரியாக ஓட்டும் போது நீங்கள்
என்னைப்பார்க்க முடியாது கடைசியாக
உங்களை குட்டி சித்தப்பாவின் திருமணத்தில் பார்த்தேன்.
நீங்கள் இங்கு இல்லா விட்டாலும் நான்
உங்களை மறக்க மாட்டேன்
ஐ மிஸ் யூ அப்பப்பா லவ் யூ

இலக்கியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் அம்மப்பா

அம்மப்பாவுக்கு உண்மையாகக் கேட்கும் காதுகள், எப்போதும் பிடிக்கும் கரங்கள், முடிவில்லாத அன்பு, முடியில்வெள்ளியும், இதயத்தில் தங்கமும் கொண்டவர்.

அம்மப்பா உதாரணமாக அனைத்து மாடுகளையும் ஒன்றாகப் பார்த்த போதும், மக்களுக்குச் சொந்தமான அனைத்து வயல் களையும் பார்த்த போது, எனக்கு பல கவர்ச்சிகரமான நினைவுகள் உள்ளன. கடைகளுக்கும், கோயில்களுக்கும் செல்ல மோட்டார் சைக்கிளில் சென்றோம். அம்மப்பா எனக்கு மோட்டார் சைக்கிள் ஓட்ட கற்றுக் கொடுக்கிறார். கடைசியாக நான் கள்ளியடியில் இருந்து விமான நிலையத்திற்குச் செல்லும் போது நான் அவரைப் பார்த்தேன்.

அவர்கள் சூட்கேஸ்சை வேனில் வைக்கும் போது நான் அவர் மடியில் அமர்ந்திருந்தேன். அம்மப்பா நான் உன்னை மிகவும் இழக்கிறேன். உங்கள் இழப்பு எப்போதும் எங்களுடன் இருக்கும்.

அவனிஷ் ஜெயக்குமார்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அப்பப்பா

அப்பப்பா அப்பப்பா நான் உங்களை
ரொம்பவே மிஸ் பண்றேன்
குட்டி சித்தப்பா கல்யாணத்துக்காகத்தான்
உங்களை கடைசியாக பார்த்தேன்
எப்பொழுதும் ஒருவரையொருவர் கை
பிடித்துக் கொண்டு நடப்பது பிடிக்கும்
அது எனக்கு மிகவும் மகிழ்ச்சி அளிக்கின்றது
உங்களை Teddy Bear போல கட்டி அணைக்க ஆசை

லிங்கன் கூர்த்திகா

## ஒரு நிமிட கதை

ஒரு முறை ஆபிரகாம் லிங்கனிடம் அறிஞர்கள் சிலர் படிப்பதற்கு எதற்காக? படிப்பதால் பணம் கொட்டப் போவதில்லை. பின்னர் ஏன் எப்போதும் படித்துக் கொண்டே இருக்கிறீர்கள் என்று கேள்வியை கேட்டனர். அதற்கு ஆபிரகாம் லிங்கனின் பதில் " நான் பணம் சேர்ப்பதற்காகப் படிக்கவில்லை. பணம் வரும் போது எப்படிப் பண்போடு வாழ வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ளவே படித்துக் கொண்டிருக்கிறேன் என்று பதில் கூறினார்.
ஒரு மிகச்சிறந்த மேதையின் ஆளுமையான பதில் அனுபவத்தை மட்டுமல்லாமல், எல்லோர் மனதிலும் நிலைத்து நிற்கும்...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாமா மா என மகிழ்வுடனே அழைத்திருந்தோம்

இன்று மாமா மாமா மனம் உருகி அழைக்கின்றோம்
ஒரு கணப்பொழுதினிலே உங்கள் உயிரி சென்று விட்டது
என்ற செய்தி கேட்டு வெந்தனலில்
விழுந்து விட்டது உணர்வு பெற்றேன்
அந்த நாள் தொடக்கம் இந்த நாள் வரைக்கும் அம்மாவுடன்
அன்பாகவே இருந்தீர்கள்
எங்கள் அப்பா இறைவன் திருவடி சென்ற பின்னர்
அம்மாவை பார்ப்பதற்கு நீங்கள் இருக்கின்றீர்கள்
என எண்ணியிருந்தேன்
காலையும் மதியமும் மாலையம் என மூன்று வேளையும்
ஓடி ஓடி அம்மாவிடம் வருவீர்கள் இரவிலும் கூட
வந்து நின்று கதைப்பீர்கள் இனி யார் மாமி வர போகின்றார்கள்
நாங்கள் வெளிநாடுகளில் இருக்கும்போது
நீங்கள் இங்கே இருந்ததனால் மகிழ்வோடு இருந்தோம்
இனி என்ன செய்யப் போகின்றோம்.
அம்மா படும் வேதனைகள் மாமி படும் வேதனைகள்
மச்சாள் மச்சான்மார் படும் வேதனைகள் அத்தனையும்
என் அடிமனதினை உருக்கி கண்ணீராக பெருகின்றதே
கண்ணீர் விட்டு அழுகின்றேன் கவலைப்பட்டு அழுகின்றேன்.
காசினியில் வாழ்ந்த கலங்கமில்லா மாமாவே
கடவுளிடம் சென்று விட்ட உங்கள் ஆத்மா
சாந்தி பெற கற்பக விநாயகரை வேண்டி நிற்கின்றேன்.

மருமகள் லீலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாசமே உருவான நேசம் மிகு மாமாவே

பண்பும் அன்பும் நேர்மையும் நியாயமும் கொண்ட நீதவானே
சின்னஞ்சிறு வயது தொடக்கம் எங்கள் ஐயா எங்களை
விட்டு பிரியும் வரைக்கும் மச்சான் மச்சான் என
மாண்புடனே வாழ்ந்து வந்தீர்கள்
ஐயாவும் நீங்களும் கொண்ட உறவுகள் செய்த
வேலைகள் பழகிய பழக்கங்கள் உண்ட
உணவுகள் எல்லாவற்றையும் நினைக்க நினைக்க
நெஞ்சு வெடிக்கின்றது
ஆசையுடன் மாமா என அழைக்கும் பொழுது
என்னம்மா கேதி என அன்புடன் அழைப்பீர்கள்
அன்று தொடக்கம் இன்று வரைக்கும் எனக்காக
எங்கள் குடும்பத்திற்காக எங்கள் பிள்ளைகளிற்காக
காவல் அரங்களாக நின்றீர்களே மாமா
எங்கள் ஐயா இறைவனடி சேர்ந்ததன் பின்னர்
நான் இருக்கின்றேன் ஒன்றுக்கும் பயப்பிடாதே
என்று கூறினீர்களே மாமா – இன்று
இனி என்ன செய்ய போகின்றேன் மாமா
நியாயத்திற்காக நீதிக்காக அஞ்சாது உரைக்கின்ற
அஞ்சா நெஞ்சமே ஆற்றல் மிகு வீரனே
உயர்ந்த உழைப்பாளியே! உத்தமனே எங்கள்
ஆசை மாமாவே
நீங்கள் எங்களை விட்டு சென்றாலும் உங்கள்
நினைவுகள் எங்கள் மனதினிலே நிலைத்து நிற்கும்
கற்பக விநாயகரின் திருப்பாதங்களை சென்றடைந்த
உங்கள் ஆத்மா சாந்தி பெற வேண்டி நிற்கின்றேன்.

மருமகள் கேதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெறாமகள்

தரணி போற்ற தவக்கொழுந்தாக அவதரித் தவப்புதல்வனே
பரணி பாடவைத்து பரிதவிக்க விட்டு விட்டு
சென்றுவிட்ட பாச குஞ்சய்யாவே
குமுறுகிறது இதயம் கொட்டுகின்றது கண்ணீர்
அலறுகின்றது வாய் குஞ்சய்யா குஞ்சய்யா என
கூவி அழைத்தாலும் உங்களிற்கு கேட்காது
எங்கே ஐயா எங்கே ஐயா எங்கள் குஞ்சய்யா சென்றீர்கள்
காற்றினிலே வந்த செய்தி பொய்யாகாதோ
காதுகளில் விழுந்த செய்தி பொய்யாகாதோ
தண்ணீரில் விழுந்த செய்தி பொய்யாகாதோ
தவமிருந்து பெற்ற உயிர் பிரிந்த செய்தி பொய்யாகாதோ
சின்னஞ்சிறு வயதினிலே பெரிசு பெரிசு
என பேர் அன்புடன் அழைப்பீர்களே
அன்று தொடக்கம் இன்று வரை குஞ்சய்யா
என்று அழைத்தவுடன் நிமிர்ந்து நின்று பார்ப்பீர்களே
நாடியைத் தடவிவிட்டு நட்புடன் கட்டியணைப்பீர்களே குஞ்சய்யா
எங்கள் ஐயாவை பார்ப்பீர்கள் என்றல்லவாபாசத்துடன் காத்திருந்தோம்
எங்கள் எண்ணங்கள் காணல் நீராகிவிட்டது எங்கள் குஞ்சய்யாவே
ஆறுதல் அடைவதற்கோ ஆறுதல் அடைவதற்கோ ஆண்டவன் தான்
துணைபுரிய வேண்டும்
ஆறாத்துயருடன் உங்கள் ஆத்மா சாந்தி பெற
ஐங்கரப் பெருமானை வேண்டிநிற்கின்றேன்

பெறாமகள்
சிவாஜினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசை மருமகன்

பாசத்தின் சிகரமோ கள்ளியடி கிராமத்தின் ஆலமரமாய் நின்று, வினாசித்தம்பி வம்சத்தின் அடையாளமாய், ஆணிவேராய் நின்ற எங்கள் ஆசமாமாவே எங்களையெல்லாம் தனியே தவிக்கவிட்டுச்செல்ல எப்படி மனசு வந்தது

நீங்கள் எங்களை உங்களின் தோழ்கழில் சுமந்து சென்ற காட்சியும், நீங்கள் எங்களை கட்டியணைத்து தரும் முத்தமும். என்றுமே எங்கள் மனதில் இருந்து ஓயப்போவதிலை மாமா,

சிறந்த குணம் படைத்த மனிதன், சிறந்த விவசாயி, துணிச்சலான வேட்டைக்காரன், ஓய்வற்ற உழைப்பாமி. எதிரிக்கும் பயத்தைக் கொடுப்பவன் எல்லாமே நீங்கள் தான் மாமா, மாமா என்பதின் அரத்தத்தை உணர்திய உங்களுக்கு, என்றுமே நாங்கள் உங்கள் அடிமை மாமா. நான் உங்களுடன் கண்ட கனவுகளையெல்லாம் நனவாக்கி விட்டு சென்றுவிட்டர்களே மாமா,

உங்களின் நீங்கா நினைவுகள் என்றுமே எங்களின் இதயங்களில் இருந்து ஓயப்போவதில்லை அது வாழ்ந்து கொண்டே இருக்கும் மாமா,

மருமகன்
க.துளசிகரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசை அண்ணாவே . . .

முத்துக்கு முத்தாக சொத்துக்கு சொத்தாக அண்ணன் தம்பி பிறந்திருந்தோம் ஒன்றுக்கு ஒன்றாக. ஓர் மரத்தின் கிளைகளாக. அக்கிளைகளின் கிளிகளாக ஒன்றாக வாழ்ந்திருந்தோம் மகிழ்வுடனே. பாசம் எனும் விளக்கிற்கு அன்பு எனும் எண்ணை ஊற்றி இரக்கம் எனும் திரி ஏற்றி தீபம் எனும் ஒளி ஏற்றி நியாயம் நீதி நேர்மையாக எங்கள் ஊரில் வாழ்ந்திருந்தோம். சின்னஞ்சிறு வயதினிலே இரட்டை குழந்தை என உறவுகள் இருவரையும் அழைப்பார்கள். அந்த வேளையில் அண்ணன் அவன் அன்பான சிரிப்பு ஒன்றை அழகுடனே முகத்தில் தவழவிடுவார். நால்வரினை அன்னிய தேசத்திற்கு அனுப்பிவிட்டு நால்வராக அம்மா, அப்பா, சகோதரர்களுடன் அன்புடனே வாழ்ந்து வந்தீர்கள். அண்ணன் நான்கு சகோதரிகளுடன் நன் மகனாக நின்று அப்பா அம்மாவிற்கு காவல் அரண் ஆகினீர்கள்.

வேட்டை என்றால் ஒரு விளையாட்டு. மாடு கன்று என்றால் ஒரு மகிழ்ச்சி, துள்ளல் தோட்ட வேலை என்றால் துணிச்சல் வீரன், வேலி போடுவதிலும் வரம்பு கட்டுவதிலும் தோட்டம் கொத்துவதிலும், நீர் இறைப்பதிலும், பால் கறப்பதிலும், பட்டி அடைப்பதிலும் உனக்கு பின்னர் தான் மற்றவர்கள். நாங்கள் வந்தால் எதுவுமே செய்ய விடமாட்டார்கள். அண்ணன், ஐயாவிற்கு, அம்மாவிற்கு, மூத்த அண்ணனுக்கு, அக்கா தங்கையரும் நீங்கள் ஆற்றிய உதவிய வேலைகளை எப்படி மறப்பது. அன்று தொடக்கம் இன்று வரைக்கும் அனைத்து வேலைகளையும் அண்ணன் நீங்களே செய்து வந்தீர்கள். ஏன் இந்த கடின உழைப்பு, ஏன் இந்த மாடுகளை என்று கேட்டால் புன் சிரிப்புடன் மௌனமே விடையாகும். நான் கள்ளியடியில் வீடு கட்டுவதற்கு நீங்களும் மச்சானும் செய்த உதவிகள் மறக்கமுடியுமா. கடைசி 01 மாத காலத்துக்குள் நான் வந்து வீடு திறப்புவிழா செய்யும் போது எனக்கு செய்த உதவிகள் ஏராளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏராளம். மறக்கமுடியுமா அண்ணா. ஒவ்வொரு நாளும் காலையில் 10ட பால் கொண்டு வருவீர்களே அண்ணா. அருகில் இருந்து பகிடிக் கதைகள் கதைத்தீர்களே அண்ணா. நாங்கள் யாழ்ப்பாணம் சென்று திரும்பி வரும் போது காரிருள் பூமியை கௌவும் வேளையில் எங்கள் வாழ்க்கையும் கொடிய இருள் ஒன்று பிடித்து விட்ட செய்தி காதில் வந்து வீழ்ந்தது. அண்ணா என அலறினேன். இந்த செய்தி பொய்யாகாதே போன செய்தி பொய்யாகியதே. காலன் அவன் கனகண்ணாவின் உயிரை கௌவிச் சென்றது பொய்யாகாதே. மெய்யான கடவுளே ஏன் இந்த வேதனையான செயலை செய்தாய். எங்களுக்காக வாழ்ந்த எங்களுக்காக உழைத்த எங்களுக்காக இருந்த மணி கோபுரம் எங்கள் அண்ணன் என் இறைவா என்ன செய்வது. விதியின் விளையாட்டை யாரால் வெல்ல முடியும். இறைவன் திருவடி அடைந்த உங்களின் ஆத்மா சாந்தி பெற சரவண பெருமாளை வேண்டி நிற்கின்றோம்.

அன்பு தம்பி
துரை



வானத்தை பாருங்கள் நாம்
தனித்து இல்லை இந்த
பிரபஞ்சம் முழுவதும் நம்மிடம்
நட்பாக உள்ளது. கனவு
காண்பவர்களுக்கு
உழைப்பவர்களுக்கு மட்டுமே
சிறந்தவற்றை வழங்குகிறது -
அப்துல் கலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்புக் குஞ்சையாவே . . .

பாசத்தின் திரு உருவே, பண்பின் இருப்பிடமே, வீரத்தின் விழைநிலமே, உழைப்பின் உயர் கிரீடமே, குஞ்சைய்யா. உங்களின் திரு முகத்தினையும், புன்சிரிப்பினையும், நிமிர்ந்த நடையினையும், நேர்கொண்ட பார்வையினையும் எண்ணி நிற்கின்றேன். பாலகனாய் இருந்த போதும் பள்ளிக்கு சென்றபோதும் தோள்மீது சுமந்தது என்னை வளர்த்தீர்கள் குஞ்சைய்யா. உங்களால் தரப்பட்ட உணவுகளையும், காட்டு விலங்கு இறைச்சிகளையும், பசுப்பாலினையும், தயிரினையும் இன்று எண்ணி எண்ணி ஏங்குகின்றேன். எங்கள் குடும்பத்தினருடன் என்றுமே அருகில் இருந்தீர்கள். ஐயாவுடனும், அம்மாவுடனும், அன்புப் பெறாமக்களுடனும் பண்புடனும், அன்புடனும், பாசத்துடனும் பழகினீர்கள். வெளிநாட்டில் இருந்து தொலைபேசியில் கதைத்தால் சிரிப்புடன் அமைதியான ஒரு சில வார்த்தைகளே வரும். குஞ்சைய்யா உங்களின் நீங்காத நினைவுகளுடன் பழைய நினைவுகளை எண்ணி எண்ணி பார்க்கின்றேன். ஆசை மாமா என அழைக்கும் வேளையினிலே மாமா நீங்கள் மருமகளுடன் மௌனச் சிரிப்புடன் களங்கமில்லா முகத்துடன் கதைப்பீர்கள். எங்கள் ஐயாவுடன் சின்னஞ்சிறு வயது தொடக்கம் ஐயாவின் இறுதிக்காலம் வரைக்கும் மச்சான், மச்சான் என்று மகிழ்வுடனே வாழ்ந்து வந்தீர்கள். ஐயாவும் நீங்களும் காடுகளிலும், மேடுகளிலும், வயல்களிலும், வரப்புகளிலும், தோட்டத்திலும், துரவுகளிலும் திரிந்தவைகள் செய்த வேலைகளை எண்ணிப் பார்க்கின்றேன். மாமா உங்களின் உணர்வுகள் நிஜமானவை, என்றும் உள்ளத்திலே நீங்காத நினைவுகளாக இருக்கும்.

ஆசை அப்பப்பா, ஆசை அப்பப்பா என அன்போடு அழைத்து நிற்போம். அன்புடன் நிமிர்ந்து பார்த்து அரவணைத்து முத்தம் இட்டு என்னப்பா, என்னம்மா என அன்புடன் அழைத்திடுவீர்கள். ஆசை அப்பப்பா உங்களுடன் பழகிய காலங்கள் குறைவு, ஆனால் உங்களின் நினைவுகளோ மிக அதிகம். உங்களை நேரில் வந்து பார்ப்போம் என நினைத்தோம். ஆனால் விதி விளையாடிவிட்டது. விபரீதமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்வு நடந்தேறியது. ஒரு கணப் பொழுதினிலே ஓராயிரம் எண்ணங்களை சுமந்து நின்று ஓர் உயர்ந்த உழைப்பாளியாய் வாழ்ந்து வந்த கள்ளம் கபடம் அற்ற மனத்திலே கொண்டிருந்த எங்கள் மகா ஆத்மா மறைந்துவிட்ட செய்தி கேட்டு திகைத்து நின்றோம். காலத்தின் கட்டளையை யாரால் வெல்ல முடியும் குஞ்சைய்யா, ஆசைமாமா, ஆசை அப்பப்பா உங்கள் ஆத்மா சாந்திபெற விநாயகப் பெருமானை வேண்டி நிற்கின்றோம்.


அன்புப் பெறாமகன் – கோபால்

மருமகள் – ஈஸ்வரி

பேரப்பிள்ளைகள் – தர்மிகா, காயத்திரி, ஜனகன்

---






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குஞ்சையா, குஞ்சையா என கூவி அழைக்கையிலே
என்ன தம்பி என அருகினிலே வந்து நிப்பீர்களே
ஆசைக்கு ஒரு குஞ்சையா அன்புக்கு ஒரு குஞ்சையா
பாசத்துக்கு ஒரு குஞ்சையா பண்புக்கு ஒரு குஞ்சையா
அன்பு என்றால் அன்பு தான் சமாதானம் என்றால் சமாதானம் தான்
சண்டை என்றால் சண்டை தான்
உங்களிடம் நான் கண்ட 03 தத்துவங்கள்
உழைப்புதான் உழைப்பு என்னவென்று உங்களிடம் நான் கத்துள்ளேன்.
அதனையே நான் இன்று செய்கின்றேன் குஞ்சையா
பட்டி சென்றால் பால் வரும் காட்டுக்கு சென்றால் இறைச்சி வரும்
வயலுக்கு சென்றால் நெல்லு வரும் தோட்த்துக்கு சென்றால்
மிளகாய் வரும் இது எனது குஞ்சையாவின் செயல்பாட்டின் பக்குவம்
ஐயா அம்மாவுக்கு அடுத்ததாக எனக்கு குஞ்சையா காவல்
வேலியாக இருந்த குஞ்சையா மறைந்து போனது ஏனோ
ஐயா அம்மாவுக்கு அடுத்ததாக எனக்கு குஞ்சையா காவல் தெய்வம்
ஐயனார் ஆவார். அரண் உடைந்து விட்டது.
இனி எங்களை காவல் காக்க யார் உள்ளார்
பாசத்தின் பிறப்பிடமே உழைப்பின் உயர்விடமே
கடமையின் கதிரவே உங்கள் நினைவுகள் மறையாது
மனம் காத்த மாமனிதன் மனது உருகி வாடுகின்றோம்
உங்களது ஆன்மா நிறைவாக இன்பம் பெற பிறை சூடியே
பெருமானின் திருவடியை வேண்டுகின்றோம்

ஓம் சாந்தி!

பெறாமகன்
சதீஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோபுர தீபமே குஞ்சையா

கோபுர தீபமாக திகழ்ந்த எங்கள் குஞ்சைய்யாவே
பாசத்துடன் எங்களை பாதுகாத்து நின்ற எங்கள் குஞ்சையாவே
உங்கள் பிள்ளைகள் போல் எங்கள் மீதும் அன்பு
வைத்தீர்கள். எங்களையும் உங்கள் வீட்டிற்கு அருகில்
இருக்க வைத்தீர்கள். எங்கள் அம்மா, அப்பாவை
உங்கள் உடன்பிறப்புப் போல் உயர வைத்தீர்கள்
ஒள் ஒன்று வைத்து புறம் ஒன்று பேசாத உத்தமனே
உங்கள் மக்களாக நினைத்து எங்களுக்கு
திருமணம் செய்து வைத்து
மகிழ்வு கண்டீர்கள். வந்த மருமக்களை உங்களின்
மகளாக நினைத்து வாழவைத்த எங்கள் குஞ்சைய்யாவே
எங்களின் உயர்விற்காய் உழைத்து நின்ற
எங்கள் குஞ்வைய்யாவே உங்களை
நினைக்கையிலே எங்கள்
இதயம் வெடிக்குதையா உங்களை
பிரிந்து நாங்கள் இனி எப்படி வாழ்வோம்.
எல்லா நேரத்திலும் உங்கள் நினைவுடனேயே
கவலையும், கண்ணீருமாக
வேதனையில் வீழ்ந்துள்ளோம்.
இறைவன் திருவடியை சென்றடைந்த உங்கள்
ஆத்மா சாந்தி பெற எங்கள்
விநாயகப் பெருமானை வேண்டி நிற்கின்றோம்.

கோகுலன், மதுஷா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசை அப்பப்பாவே

அன்பும் அறிவும் பண்பும் நிறைந்த அப்பப்பாவே
பாசத்துடன் எங்களுடன் பழகி வந்த அப்பப்பாவே
வீரம் விளை நிலமாக கொண்ட அப்பப்பாவே
உண்மையை உள்ளத்தில் உறை இடமாக கொண்ட எங்கள் அப்பப்பாவே
கடை வீதியில் கண்டால் என்னம்மா என்று கேட்பீர்கள்
களங்கம் இல்லா உள்ளத்துடன் நிமிர்ந்து பார்ப்பீர்கள்
உழைப்பென்றால் என்னவென்று உங்களிடம்
நாங்கள் கற்றுக் கொண்டோம்.
உழைத்து, உழைத்தே உயர்ந்து விட்ட உத்தமனே
உங்களை நம்பியே இங்கு நாங்கள் வாழ்ந்திருந்தோம்.
எங்களுக்காய் குரல் கொடுத்த எங்கள் இதய தெய்வமே
நீதிக்காய், நியாயத்திற்காய் வாழ்ந்து இருந்தீர்கள்
இன்று நீதி தேவனின் காலடியில் போய் சேர்ந்து
விட்டீர்கள்
காசினியில் வாழும் மட்டும் கடமை வீரன் ஆனீர்கள்
கணப்பொழுதும் உழைத்து உழைத்து உயர்ந்து நின்றீர்கள்
காலதேவன் கணப்பொழுதினிலே உங்கள்
இன் உயிரை எடுத்த செய்தி காதுகளை வெடிக்க
செய்தன. கண்களில் இருந்து கண்ணீர் சொரிய வைத்தன. நெஞ்சமே நெருப்பாக கொதித்து எரிந்தது. உலகமே இருண்டு விட்டது. எங்கள் வாழ்வில் வசந்த நிலா மறைந்து விட்டது. அப்பப்பா உங்கள் ன்பும் பாசமும் நேர்மையும் என்றுமே எங்கள் உள்ளத்தில் நிறைந்து நிற்கும். நீங்கள் சென்ற திசை நொக்கி வணங்கி நிற்கின்றோம் உங்களுடைய ஆத்மா சாந்தி பெற முத்துமாரி அம்பாளை வேண்டி நிற்கின்றோம்.

பேரப்பிள்ளைகள்
தமிழினி, தாரணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குஞ்சையா ..

குஞ்சையாவே எனக்கு மிகவும் பிடிக்கும் எப்போதும் சிரித்த முகத்துடன் என்னை அரவணைத்து சந்தோசப்படுத்தும் பக்குவம் கொண்ட நீங்கள் எங்கு சென்றீர்கள் ..

குஞ்சையாவை அடிக்கடி பார்ப்பதுண்டு இருந்தும் பார்க்கும் நேரம் எல்லாம் முதல் முறை பார்ப்பது போலவே உங்களுடைய அன்பையும் பாசத்தையும் வெளிப்படுத்தும் நீங்கள் எங்கு சென்றீர்கள் என்னை விட்டு சென்றீர்கள். குஞ்சையா நான் தந்தை இல்லை என தெரிந்தும் எனக்கு தந்தை என் தந்தை போல் என்னை வளர்த்து உங்களின் ஓர் பிள்ளை போல் அன்பையும் பாசத்தையும் வெளிப்படுத்தி குழந்தைகளுடன் குழந்தையாக மாறி நகைச்சுவையான பேச்சும் செல்லமாக சிரித்து மகிழும் நீங்கள் எங்கு சென்றீர்கள் என்னை விட்டு.

குஞ்சையா என்னுடைய படிப்பினையும் எதிர்காலத்தையும் எண்ணி பலமுறை அறிவுரை கூறி என்மேல் நம்பிக்கை வைத்து என்னை ஊக்குவித்து அத்துடன் என்னை பார்ப்பதற்கு நீங்களும் அன்ரியும் எதிர்காலத் திட்டங்களை நீங்களின்றி எதையும் எடுத்ததில்லை. இனிமேல் எந்தவொரு திட்டத்திலும் உங்கள் முகம் வந்து நிற்க நாங்கள் என்ன செய்வோம். ஆனால் இப்போது வெகுதூரம் சென்றதோனோ – நீங்கள் எங்கு சென்றுவிட்டீர்கள் என்னை விட்டு.

என்ர குஞ்சையா நான் எப்போது காண்பேன்.

உங்களின் பிள்ளை

வசந்தி (சிவா)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வழித்த வள்ளலே

வாழ்வதற்கு வாழ்க்கையினை தேடி தந்தீர்கள்
வாழ்க்கை துணை ஒன்றினையும் கரம்பிடிக்க வைத்தீர்கள்
உடன் பிறவா சகோதரனாய் உலகினில் பவனி வர வைத்தீர்கள்
எதற்கும் பயப்பிடாதே எது வந்தாலும் நானிருக்கிறேன் எனக்கூறி
உங்கள் மனைக்கருகே எங்களையும் வாழ வைத்தீர்கள்.
உங்கள் பிள்ளைகள் போல் எனது பிள்ளைகளையும்
அரவணைத்து என்னையும் எனது மனைவியையும்
மகிழ்வுடன் இருக்க வைத்தீர்கள்
அன்று தொடக்கம் இன்று வரைக்கும் தம்பி என்ன வேண்டும்?
சாப்பிடுங்கள் என்ற வார்த்தையே கண்டவுடன் வரும்.
அண்ணா அண்ணா என அழைக்கின்றேன்.
வார்த்தைகள் வரமறுக்கின்றன
சில நாட்களிற்கு முன்பு ஏனடா இப்படி மெலிந்து விட்டாய்
சாப்பிடுவது இல்லையா என உரக்க கேட்டீர்கள்
அந்த குரல் இன்று எங்கே போய்விட்டது அண்ணா
நீங்கள் இருக்கின்றீர்கள் என்ற துணிவுடன் இருந்தேன்
இனி யார் எனக்குத்துணை
உங்கள் பிரிவால் வாடி நிற்கின்றேன்
உங்கள் ஆத்மா சாந்தி பெற பிள்ளையாரை வேண்டுகின்றேன்.

உடன்பிறவா சகோதரன்
ம. முத்துலிங்கம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு தெய்வம் குஞ்சையா

கார்முகில் ஒத்த மேனியை ஒத்த மேனியனே
கார் வண்ணனே எங்கள் காவல் தெய்வமே குஞ்சையா
ஐயா அம்மாவுடன் நான் இருந்த போதிலியே
அன்பு காட்டி அரவணைத்த எங்கள் குஞ்சையாவே
பாசத்துடன் பால் கொண்டு வந்து தந்ததை நினைப்பதா
ஆசையுடன் என்னை அழைத்து சென்றதை நினைப்பதா
கள்ளியடியிலே எங்களுக்கு காவல் தெய்வம் எங்கள் குஞ்சையா
கடமை என்றால் என்னவென்று காட்டினீர்கள்
வீரம் என்றால் என்னவென்று காட்டினீர்கள்
உழைப்பு என்றால் என்னவென்று காட்டினீர்கள்
உத்தமனே குஞ்சையா உயர்ந்தவனே குஞ்சையா
மன்னாரில் இருக்கையில் மகிழ்வுடனே வருவீர்கள்
வந்தவுடன் வீட்டுக்கு போக போகின்றேன் என்பீர்கள்
என் குஞ்சையா எனக் கேட்டால் மாடுகள், கன்றுகள், வயல்
வேலைகள் தோட்ட வேலைகள் என உழைப்பை
பற்றியே கூறுவீர்களே குஞ்சையா
ஓயாத அலைகள் என உழைத்து உயர்ந்தவரே
உன்னதமானவனே நீதியின் காவலனே எத்தனை
ஆண்டுகள் உங்களை பார்த்து பழகி நேராக கதைத்தமை
13 ஆண்டுகள் ஆகி விட்டமையே குஞ்சையா
வருவேன் வருவேன் என எதிர்பார்த்து இருந்த வேளையில்
வந்ததே ஒரு செய்தி வானமே தலையில் இடிந்து விழுவது
போன்றது செய்தி கேட்டு சுக்குநூறானது
குஞ்சையா நீங்கள் பட்டியில் இருந்து வரும் பொழுது நீரினிலே விழுந்து
இவ் உலகை விட்டு பிரிந்து விட்டீர்கள் நம்பவே முடியவில்லை
தர்ம தேவன் எங்கள் தர்மத்தின் தலைவனை
அழைத்து விட்டானே ஆண்டவா எங்கள் குஞ்சையாவின்
ஆத்மா சாந்தி பெற விநாயகப் பெருமானை வேண்டி நிற்கின்றோம்.

பெறாமகள்
முரளிகரன் கிருஷாந்தினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேட்டை நாயகன் எங்கள் குஞ்சையா

எனக்கு நினைவு தெரிஞ்ச நாள் முதல் எங்கள் குஞ்சையா துவக்குடனும் வேட்டை நாயுடனும் தான் அதிகம் பார்த்திருக்கின்றேன். மாடும், பட்டியும், தோட்டமும், துரவும், வயலும் வாய்க்காலும் காடும், கரம்பையும், வேட்டையும் என ஓடித்திரிந்த அவருடைய பாதங்கள்இன்று ஓய்வெடுத்து விட்டன. ஆனால் நம்பவே முடியவில்லை.

பழைய வாகன பற்றிக்குள் இருக்கும் ஈயத்தை எடுத்து நெருப்பில் காய்ச்சி முற்றத்தில் விரலால் ஓட்டை போட்டு அதில் ஊற்றி அது காய்ந்த பிறகு சின்னதாக வெட்டி எடுத்து உருட்டி தோட்டா செய்வார். அதை நான் இப்போதும் மறக்கவில்லை. கத்தியை எடுத்து தீட்டும் போது அவருடைய வேட்டை நாய்கள் வாலாட்டிக் கொண்டு வேட்டைக்கு தயாராகும் காட்சி கண்முன்னே வந்து போகிறது குஞ்சையா போனாலே ஏதாவது காட்டிறைச்சி வரும் என்று பார்த்துக் கொண்டிருந்தது அந்தக் காலம். நாங்கள் மட்டுமா ஊரே பார்த்துக் கொண்டிருக்கும் காட்டுக்குள் வெடிச்சத்தம் கேட்டாலே ஏதாவது இறைச்சி வரும் என பார்த்துக் கொண்டிருப்பார்கள். அதை ஊரவர்களுக்கு பங்கு போட்டுக் கொடுப்பதே வழக்கம்.

நாங்கள் மன்னார் நகரப் பகுதியில் இருக்கும் போது கூட குஞ்சையா இறைச்சி கொடுத்து விடாத நாளே இல்லை. யாருடனும் எந்தப் பாகுபாடின்றி பழகுவதற்கு அவருக்கு நிகர் அவரே. இதற்கு அவருடைய இறுதி அஞ்சலிக்கு வந்த மக்களே சாட்சி. குஞ்சையாவை பற்றி எழுதுவதற்கு நிறைய இருந்தாலும் அவர் வேட்டை பற்றி சிறு குறிப்பே இது. எங்களுடைய பரம்பரை மாட்டுக்கும், பட்டிக்கும் நிறைய தொடர்பு உள்ளது. இனி குஞ்சையாவோடு நிறைவுக்கு வந்துவிடுவோமோ தெரியவில்லை.

எங்கள் குஞ்சையா எங்களை விட்டு பிரிந்தாலும் அவர் நினைவுகள் என்றும் எங்கள் வாழ்வில் தொடரும்.

பேறாமகன்
முத்து விஜிதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதவிக்கரம் கொடுக்கும் குஞ்சையாவே

வையகத்தில் சிறப்புடன் வாழ்ந்த ஆசையப்பாவே
எங்களை அன்புடன் அழைத்து பாசத்துடன் பார்த்துக் கொண்டீரே
அன்பான பேச்சும் அழகுமிகு சிரிப்பும்
எல்லோரையும் கவர்ந்து விடுமே ஆசையப்பா
உதவி என்று கேட்டால் இல்லையென்றாமல்
உதவி செய்யும் கரம் கொண்டவரே
எங்களுடைய அப்பாவை அன்போடு
அழைப்பீர்களே ஆசையப்பா
எவ்வளவு தேடினாலும் கிடைக்காத உறவு
நீங்கள் தான் ஆசையப்பா
அன்புடன் பழகி வந்த நாட்களை
மறக்கமுடியவில்லை ஆசையப்பா
வீட்டிற்கு வரும் போதெல்லாம் சாப்பிட்டியாமா
என்று கேட்பீர்களே
நீங்கள் இனி இல்லை என்பதை எங்களால்
ஏற்றுக் கொள்ள முடியவில்லை
இன்னும் பல காலங்கள் வாழ்ந்திருக்கலாம்
ஆசையப்பா
எவ்வளவு காலம் சென்றாலும் உங்கள்
நினைவுகள் என்றுமே நீங்காது
மீண்டும் ஒரு பிறப்பு இருக்குமானால் மீண்டும்
ஆசையப்பாவாக நீங்கள் தான் வேண்டும்
என்றும் எல்லோர் மனதிலும் உங்களின்
சிரிப்பும், வீரமும் என்றுமே மறவாது
உங்களுடைய ஆத்மா சாந்தி பெற சிவபெருமானை
வேண்டிக் கொள்கின்றோம்

குகனேஸ்வரன், தனேஸ்வரன்,
றமேஸ்வரன், தனுஜா, கார்த்திகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசையப்பா ஆசையப்பா

ஆசையப்பா ஆசையப்பா என அன்புடனே அழைத்து வந்தோம்
அன்று தொடக்கம் இன்று வரை பாசத்துடன் பழகியிருந்தோம்
வீடு வந்து சேர்கையிலே என்னம்மா என்னய்யா
என அன்புடன் அழைப்பீர்கள்
பாசத்துடனும் ஒரு வித பயத்துடனும் ஆசையப்பா
என அன்போடு அழைத்தோம்
ஏன் ஆசையப்பா இவ்வளவு விரைவாக
எங்களை விட்டு பிரிந்தீர்கள்
எங்களை கண்டவுடன் சாப்பிடுங்கள் என்று தான் கூறுவீர்கள்
வயலுக்கு போக வேண்டும் பட்டிக்கு ஆசையம்மாவுடன்
இருங்கள் என்று கூறி விட்டு மோட்டார் சைக்கிளினிலே மோகனமாக
செல்வீர்களே ஆசையப்பா
பாசம் நிறைந்தவரே பண்புள்ளம் கொண்டவரே
உள்ளொன்று வைத்து புறமொன்று பேசாத
புண்ணிய சீலனே புருசோத்தமனே எங்கள் ஆசையப்பா
எங்கள் அம்மாவை கண்டவுடன் என்னம்மா
எப்படி இருக்கின்றாய் என கேட்பீர்கள்
தம்பி என்ன செய்கின்றார் என எங்கள்
அப்பாவை கேட்பீர்களே ஆசையப்பா இனி
யார் அதை கேட்பார்கள்
இரவு வந்த செய்தி கேட்டு எங்கள் இதயங்கள்
வெடித்தது கத்தினோம் கதறினோம் விழுந்தோம் புரண்டோம்
ஆசையம்மாவிடம் வந்து அழுதோம் கண்ணீர் விட்டோம்
உங்கள் பிரிவால் வாடி துன்பமுறுகின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தி பெற முத்துமாரியம்மனை
வேண்டி நிற்கின்றோம்

பேரமக்கள்
சம்யா, பவீந், ரம்மியா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கட பகி அம்மப்பா தவிக்கின்றோம்...

சிரித்த முகம் சிந்திக்க வைக்கும் பேச்சு எதையும்
மறக்கவும் மன்னிக்கவும் தெரிந்த மனம் அதனாலோ ஏனோ
யாருக்கும் நீங்கள் பகை அல்ல
உங்கள் சிரித்த முகம் மறைந்தது ஏனோ! அம்மப்பா
களங்கமற்ற அந்த முகத்தை எப்போது நாங்கள் பார்ப்பது
அம்மப்பா உங்கள் நினைவுகள் எங்களுடன் என்றும் இருக்கும்
குறுகிய நேரத்தினுள் நீங்கள் கூறும் ஆலோசனைகள்
அளப் பெரியது அவை அப்போது மனதில் வெடிக்கிறது அம்மப்பா
மனசுக்குள் ஆயிரம் நினைவுகள் இருக்கும்ஆனால் அதை
சொல்வதற்கு சில நேரங்களில் நமக்கு கண்ணீர் மட்டுமே
மொழியாக இருக்கும் உங்களுக்கு ஏற்பட்ட இந்த சோகம்
எங்களை வாட்டி வதைக்கிறது அம்மப்பா
எங்கட பகி அம்மப்பா இனி யாரை அழைப்பது

பேரப்பிள்ளைகள்
கோபிநாத், சுரேந்தினி,
பவித்திரன், பவித்திரா






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

From hearing the news about you ammappa, we were broken. There are truly no words to describe this feeling. We are unable to believe that you are really gone. Ammappa you have left your precious smile behind along with the memories that we will forever cherish.

We will miss you Ammappa

**Mathushan Krishnakumar,**
**Mathusha Krishnakumar, and Mithuna Krishnakumar.**












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பு மாமாவே

சுயநல நாட்டில் சுயநலம் இல்லாமல் வாழ்ந்த மனிதர்
தன்னைப் போல மற்றோரையும் எண்ணும் எங்கள் மாமா
ஊருக்குப் வரும் போதெல்லாம் உங்கள் முகத்தில் மலரும் அந்தச் சிரிப்பு
பட்டியிலிருந்து வரும் போது பால் கானுடன் வந்து ரீ போடத்தருவீர்கள்
போனில் கதைக்கும் போது "பிள்ளை" எங்கே என்று என்னையும் மறக்காமல் விசாரிப்பீர்கள்
இன்று ஆண்டவன் எங்களை சோதித்து விட்டான்
"அக்னி" அஸ்தியானது
"சிறகு" முறிந்தது
"கனவு" கலைந்தது
"அன்பு" ஆகாயத்தில் கலந்தது
"மாமா" உங்களையும் பாவிகள் நாங்கள் தவற விட்டோம்
இனி யார் உள்ளார் உம்மைப் போல்
எம்மீது பாசம் கொள்ள....

இங்ஙனம்
மருமகள் – தர்சி பிரபா
பேரப்பிள்ளைகள் – ரசிகா பிரபா
ஆதித்தன் பிரபா, அர்விந் பிரபா
அக்சயன் பிரபா





noolaham.org | aavanaham.org

## ஆசைச்சித்தப்பா....

மாதமொன்று ஆனதய்யா உங்கள்
வண்ணமுகம் மறைந்து
கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகி போனாலும்
உங்கள் நினைவுகள் எங்கள்
இதயங்களில் இறந்து
ஒருபோதும் மறைவதில்லை

வசதிகள் பல வந்து
உங்களை சூழ்ந்த போதும்
உங்கள் குணமும் மாறவில்லை
உங்கள் உழைக்கும் கரமும்
என்றும் சோர்ந்ததில்லை

பண்பில் பெருந்தகையாகவும்
பாசத்தில் உறைவிடமாகவும்
எங்களுக்குள் அன்பு ஒளியாக
இருந்த உத்தமரே
மண்விட்டுமறைந்து
நீங்கள் சென்றாலும்
மனம் விட்டுமறையாமல்
கன காலம் வாழ்வீர்கள்

என்றும் உங்கள் நினைவுகளோடு,
தீபன், சுபா, ருத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. விநாசித்தம்பி கனகலிங்கத்துடன் சில நிமிடங்கள்...

கள்ளியடி கிராமத்தில் பிறந்தாலும்
கட்டாடு வயல் தம்பியுடன் வாழ்ந்த அண்ணன்
சிறு வயதில் இருந்து .........
சிந்தனையில் இருக்கும் அண்ணன்
எவருக்கும் பணியாத இறுக்கமான சொல்வீரன்
என் அண்ணன்
துணிவுடனே எதையும் செய்யும் செயல் வீரன்
என் அண்ணன்
கனிவான உன் பார்வை அது எங்கே? எங்கே?
கம்பீர தோற்றமது எங்கே? எங்கே?
இனி யாரை நம்பி இந்த தம்பி வாழ்வான்
இறுதியாக கண்ட உன் முகமும்
இறுக்கமான உன் பிடிவாதமும்
இயமன் பிடிக்குள் சிக்கினியோ அண்ணா!
பொறுக்குதில்லை தம்பியின் இதயம் அண்ணா
பொங்கி வரும் ஆற்றில் உந்தன் ஆத்மா
போய் சேர்ந்ததோ என் அண்ணா
துடிக்கிறது என் ஆத்மா உன்
துயர்ச்செய்தி எம் குடும்பத்தையே மீளா துயரில் ஆழ்த்தியது
உன்பிரிவால் ஏங்கி துடிக்கும்
உன் குடும்பம், உற்றம், சுற்றம், சூழல்
உணர்வாயோ? என் அண்ணா!
அண்ணன் என்ற நாமம் என் ஆத்மா
உள்ளவரை இருக்கும்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

இவன் உன் தம்பி
ஆ. அமிர்தலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கள்ளியடியின் தனி மகன் கனகப்பா . . .

நானறிந்து தனித்தவம் மிக்க மனிதர்களில் கனகலிங்கம் ஐயாவிற்கும் ஓரிடம் உண்டு. இயற்கையோடு இயற்கையாக வாழ்ந்த தூய மனம் கொண்டவர். வேலை நிமித்தம் நான் வந்த பொது உறைவிடம், உணவு தந்து என்னையும் தன் குடும்பத்தில் ஒரவராகக் காத்தவர். விருந்தினரை உபசரிப்பதிலும் அவர் மன நிலை அறிந்து வேண்டுவன செய்வதும் இவரது தனித்தவம் அதை தன் மனையாளிடமும் பிள்ளைகளிடமும் உருவாக்கிக் கொண்ட ஒரு உதாரண புருஷர் கடைமையே வழிபாடு என கொண்ட கர்ம வீரன்.

எதிர்பார்ப்பு என்பத ஒரு துளியும் இல்லாத மனிதன் என ஒருவரையும் இவரைப் போல் கண்டதில்லை யாரையும் எதிலும் எச்சந்தர்ப்பத்திலும் என்ன சரி பிழை செய்தாலும் வெளிக்காட்டாத தன்மை ஒரு மனிதனின் உயர் பக்குவ நிலையை இவரிடம் கண்டேன். தந்தைக்கு பின் மூத்த தமையனாரையே அந்த ஸ்தானத்தில் கொண்டு வாழ்ந்த மரபு பெருமைக்குரியது. கடிகாரம் போல் தன் நாளாந்த கடமைகளை ஆற்றியவர். எங்கு சென்றாலும் பட்டி நேரம் வீடு திரும்பிட வேண்டும் என்பது இவரது மூச்சோட்டமாக இருந்ததை காணலாம். யாருக்கும் கடமைப்படாதவராக தன் உடலுழைப்பில் எளிமையாக வாழ வேண்டும் என்பதே இவரது வாழ்க்கை இலட்சியம். தல[illegible]ன ஓட்டம், வாட்டம், வலிகளை ஒரு சிரிப்பிலே மறைத்து விட்டு அமைதியாக இருப்பது இவரது தனித்துவம், கள்ளியடியின் வரலாற்றில் இவர் ஒரு வரலாற்று காவிய நாயகன். மனதிலே இறைவனை வழிபடும் தன்மையை இவரிடம் கண்டேன். தன் வாழ்வில் பிள்ளைகளின் உயர்வை எண்ணுவதும் அதை இறைவனிடம் மனதாலே வேண்டுவதும் அவரிடம் கண்டு கொண்டேன். நெருக்கடியான சந்தர்ப்பங்களின் முடிவை இறைவனிடம் விட்டு விட்டு வெளிக்காட்டாது கடமையாற்றுவார். வெற்றிகளே எதிலும் கண்டார். சுற்றங்கள் பல கொண்டார். முடிவு கொண்டால் மாற்ற மாட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதியாக நிற்கும் மனவலிமை கொண்டவர். அன்பை செயலால் மட்டும் வெளிப்படுத்தும் குணங்கொண்டவர். அவரிடம் படிப்பதற்கு பல வாழ்வியல் நடைமுறைகளை நான் கற்றுக் கொண்டேன். என்னுள் சில மாற்றங்களை இவரது வாழ்க்கையில் இணைந்திருந்து பெற்று பெருமை கொண்டேன்.

இவரது பிரிவு ஓர் அதிர்ச்சி எதிர்கால பல கற்பனைகளோடு சிந்தித்திருந்த வேளை விதியின் சதியால் கடமையிலே கடைமை நிறைவிலே தான் போட்ட பாதையே தவிக்க விட்டு சென்று விட்டார். தன் வாழ்க்கையை உதாரண வரலாறாக்கி நன் மக்களை தன் பணி தொடர இல்லாளையும் ஊருக்கு தந்து விட்ட கனகப்பா எம் வாழ்வில் ஓர் சுடர் வினக்கு ஏற்க முடியாத இழப்பு. தாங்க முடியாத தவிப்பு எம் உயிரில் கலந்த உணர்வு கனகையா! பிறப்பிருந்தால் வாருங்கள் எங்கள் உறவாக!

மு.தவேந்திரன்
ஆசிரியர்
குடும்பத்தில் ஒருவராக கொண்ட உறவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தம்பி துரையின் புதுமனை புகுவிழாவின் போது துணைவியாருடன் 10.11.2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோளறு பதிகம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள்கங்கை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள்செவ்வாய் புதன்வியாழன் வெள்ளி
சனிபாம்பு இரண்டும் உடனே
ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே.

என்பொடு கொம்பொடாமை இவைமார்பு இலங்க
எருதேறி ஏழை உடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஒன்பது ஒன்றொடுஏழு பதினெட்டொடு ஆறும்
உடனாய நாள்கள் அவைதாம்
அன்பொடு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே.

உருவளர் பவளமேனி ஒளி நீறணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றைதிங்கள் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலையதூர்தி செயமாது பூமி
திசை தெய்வமான பலவும்
அருநெதி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே.

மதிநுதல் மங்கையோடு வடபால் இருந்து
மறையோதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொதியுறு காலன்அங்கி நமனோடு தூதர்
கொடு நோய்களான பலவும்
அதிகுணம் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே

நஞ்சணி கண்டன்எந்தை மடவாள் தனோடும்
விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னிகொன்றை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடு உருமிடியும் மின்னும்
மிகையான பூதம் அவையும்
அஞ்சிடு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே

வாள்வரிய தளதாடை வரி கோவணத்தர்
மடவாள் தனோடு உடனாய்
நாள்மலர் வன்னிகொன்றை நதிசூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
கோளரி உழுவையோடு கொலையானை கேழல்
கொடு நாகமோடு கரடி
ஆளரி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே

செப்பிள முலைநல்மங்கை ஒரு பாகமாக
விடையேறு செல்வன் அடைவார்
ஒப்பிள மதியும்அப்பும் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும்வாத மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேள்பட விழிசெய்துஅன்று விடைமேல் இருந்து
மடவாள் தனோடும் உடனாய்
வாள்மதி வன்னிகொன்றை மலர்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழ்இலங்கை அரையன் தனோடும்
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே

பலபல வேடமாகும் பரனாரி பாகன்
பசுவேறும் எங்கள் பரமன்
சலமகளோடு எருக்கு முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
மலர்மிசையோன் மால் மறையோடு தேவர்
வரு காலமான பலவும்
அலைகடல் மேருநல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே

கொத்தலர் குழலியோடு விசையற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமும் மதியும் நாகம் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
புத்தரோடு அமணைவாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநீற்று பதிகம்

மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருஆல வாயான் திருநீறே (1)

வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு வுண்மையி லுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருஆல வாயான் திருநீறே (2)

முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திருஆல வாயான் திருநீறே (3)

காண இனியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி அணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருஆல வாயான் திருநீறே (4)

பூச இனியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச இனியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருஆல வாயான் திருநீறே (5)

அருத்தம தாவது நீறு அவல மறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு வானம் அளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும்வெண் ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருஆல வாயான் திருநீறே (6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எயிலது அட்டது நீறு இருமைக்கும் உள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கிய மாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம தாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத் தால வாயான் திருநீறே (7)

இராவணன் மேலது நீறு எண்ணத் தகுவது நீறு
பராவண மாவது நீறு பாவ மறுப்பது நீறு
தராவண மாவது நீறு தத்துவ மாவது நீறு
அராவணங் குந்திரு மேனி ஆல வாயான் திருநீறே (8)

மாலொ டயனறி யாத வண்ணமு முள்ளது நீறு
மேலுறை தேவர்கள் தங்கள் மெய்யது வெண்பொடி நீறு
ஏல உடம்பிடர் தீர்க்கும் இன்பந் தருவது நீறு
ஆலம துண்ட மிடற்றெம் மால வாயான் திருநீறே (9)

குண்டிகைக் கையர்க ளோடு சாக்கியர் கூட்டமுங் கூட
கண்டிகைப் பிப்பது நீறு கருத இனியது நீறு
எண்டிசைப் பட்ட பொருளார் ஏத்துந் தகையது நீறு
அண்டத் தவர்பணிந் தேத்தும் ஆல வாயான் திருநீறே (10)

ஆற்றல் அடல்விடை யேறும் ஆலவா யான்திரு நீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்ன னுடலுற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே (11)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலகலாவல்லிமாலை



வெண்டா மரைக்கன்றி நின் பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொ
லோசக மேழு மளித்து
துண்டா னுறங்க வொழித்தான்பித்
தாகவுண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்கும் கரும்பே
சகல கலாவல்லியே.

அளிக்குஞ் செந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகலகலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர்செந் நாவினின்று
காக்கும் கருணைக் கடலே
சகலகலாவல்லியே.

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்ந்தோன்செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகலகலாவல்லியே.

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்த நல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலுங் வெங் காலுமன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே.

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
காயுளங் கொண்டு தொண்டர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதந்தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே.

சொல்விற் பனமு மவதான
முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமை கொள்
வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமைநல்குங்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே
சகலகலாவல்லியே.

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத்தாளே
சகல கலாவல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண்டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பிலுன் போற்
கண்கண்ட தெய்வமுளதோ
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதா ரமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனு மாகாள் கிடந்தாள்என் னேயென்னே
ஈதேஎந் தோழி பரிசேலோ ரெம்பாவாய்.

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதா ரமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி யிவையுஞ் சிலவோ விளையாடி
ஏசு மிடமீதோ விண்ணோர்க ளேத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோ ரெம்பாவாய்.

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன்ஆ னந்தன் அமுதன்என் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய்.

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்
தெண்ணிக் குறையில் துயிலேலோ ரெம்பாவாய்.

மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்
றோலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய்.

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே யெழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும்எமக்கும்

ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய்.
அன்னே இவையுஞ் சிலவோ பலவமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய்.

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழிஈ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய்.

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எம்கணவ ராவார் அவர்உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோ ரெம்பாவாய்.

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவன்ஊர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போற்
செய்யாவெண் ணீறாடீ செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோ ரெம்பாவாய்.

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடுந்
தீர்த்தன்நற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தன்இவ் வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய்.
பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருள்ஆ மாபாடிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தம்ஆ மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோ ரெம்பாவாய்.

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.
முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவணமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய்.

செங்கண வன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம்என்
றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போம்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகல்எங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய்.

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றிஎல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றிஎல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றிஎல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேதாரகௌரி காப்பு



## விநாயகர் துதி

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின்றருள் செய் எலிவாகனப் பிள்ளாய்
சொற்குற்றமொடு பொருட்குற்றம் சோர்வுதரும்
எக்குற்றமும் வாராமற் கா.

காப்பெடுக்க வந்தேனே கௌரி அம்பாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக்கு உயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்து வந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தரமுகத்தவளே
அரியை உடையவளே அம்மா காளிதாயே
கொடிய மகிஷாசுரனை கூறுபோட்டவளே
அசுரர்குணம் யாவும் அழிக்கும் சுடர்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரனை நினைத்தல்லோ அம்மா நீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்று நீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமை அணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளுந் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை யற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்கு கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்கு திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தித் தாயவளே
ஏட்டுடைத் தேவியரே எல்லாம்மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால் பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாரேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளி மகாதேவியரே காசினிக்கு வித்தவளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்துவரும்
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பியணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரி அம்மா
காப்புக்கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோல் கனற்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிரு
பக்திமனதுடனே பரவி அணிவோர்க்கு
சித்தியெலாம் தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சகத்தி லோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி யெல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரி காப்பதனைக் காலம் தவறாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையாய் அணிந்து வர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்.
'அம்பிகையை சரண் புகுந்தால் அதிக வரம் பெறலாம்"

## தேவி விரதம் - கேதாரகௌரி விரதம்

இவ்விரதம் புரட்டாதி மாத வளர்பிறை அட்டமித்திதியில் ஆரம்பமாகி ஐப்பசிமாத தேய்பிறைச் சதுர்த்தசியில் முடிவுறுகின்றது. இருபத்தொரு நாட்களைக் கொண்ட மஹோன்னத விரதம் இதுவாகும். உமாதேவியார் சிவனை நோக்கி பூஜை செய்து அர்த்தநாரீஸ்வரப் பேற்றினைப் பெற்ற விரதமாகையால் இது கேதாரகௌரி விரதம் எனச் சொல்லப்பட்டது. மணமாகாத கன்னிப் பெண்கள் நல்ல மாங்கல்ய வாழ்வை வேண்டியும் மணமாகிய பெண்கள் தங்கள் மாங்கல்யம் தொடர்ந்தும் மங்களமாக இருக்கவேண்டியும் இவ்விரதத்தை நோற்பர். விரதம் ஆரம்பமான நாளிலிருந்து இருபத்தொரு இழைகளைக் கொண்ட நூலில் நாள்தோறும் ஒவ்வொரு முடிச்சாக இட்டு இறுதி நாளன்று அந்நூலை கோயில் குருக்களைக் கொண்டு ஆண்கள் தமது வலது கையிலும் பெண்கள் இடது கையிலும் அணிந்து கொள்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனா வைரஸ்

கோவிட்-19 பெருந்தொற்று என்பது கடுஞ்சுவாசக் கோளாறு கொரோனாவைரஸ் 2 (SARS- CoV- 2) என்ற தீநுண்மி காரணமாக ஏற்படும் கொரோனாவைரஸ் நோயின் (கோவிட்-19) பெருந் தொற்றாகும். இது கொரோனாவைரஸ் பெருந்தொற்று என்றும் அறியப்படுகிறது. இந்நோயின் தொற்று முதன்முதலில் சீனாவின் வூகானில் 2019 திசம்பரில் அடையாளம் காணப்பட்டது.ஜனவரி 30 அன்று கோவிட்-19 தொற்றை உலக அளவில் பொது சுகாதார அவசரநிலையாகவும், மார்ச் 11 அன்று ஒரு பெருந்தொற்றாகவும் உலக சுகாதார அமைப்பு அறிவித்தது.16 டிசம்பர் 2021 அன்றைய நிலவரப்படி, 188 நாடுகளில், 24,77,40,899பேர் பாதிக்கப்பட்டு, இவற்றுள் 50,17,139பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த வைரஸ் பெரும்பாலும் மக்களிடையே நெருக்கமான தொடர்பின்போது இருமல், தும்மல் மற்றும் பேசுவது ஆகியவற்றின் மூலம் உருவாகும் சிறிய நீர்த்துளிகள் வழியாகப் பரவுகிறது. இந்த நீர்த்துளிகள் வழக்கமாக நீண்ட தூரம் காற்று வழியாக பயணிப்பதை விட தரையில் அல்லது மேற்பரப்பில் விழுகின்றன. சில நேரங்களில், தொற்றுள்ள மேற்பரப்பைத் தொட்டுவிட்டு, பின்னர் தங்களின் முகத்தைத் தொடுவதன் மூலமாகவும் மக்களுக்குத் தொற்று ஏற்படக்கூடும். அறிகுறிகள் தோன்றிய முதல் மூன்று நாட்களில் தொற்றுப் பரவல் வீரியமாக இருக்கும், எனினும் அறிகுறிகள் தோன்றுவதற்கு முன்பும், அறிகுறிகளைக் காட்டாத மக்களிடமிருந்தும் தொற்று பரவ சாத்தியமுள்ளது.

பொதுவான அறிகுறிகளில் காய்ச்சல், இருமல், சோர்வு, மூச்சுத் திணறல் மற்றும் வாசனை உணர்வு இழப்பு ஆகியவை அடங்கும்.நோய் தீவிரமடையும்போது நிமோனியா மற்றும் கடுமையான மூச்சுத்திணறல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியவை ஏற்படும். அறிகுறிகள் வெளிப்படும் கால இடைவெளியானது முதல் ஐந்து நாட்கள் வரை இருக்கும் சிலநேரங்களில் இரண்டு முதல் பதினான்கு நாட்கள் வரைக்கூட இருக்கலாம். இத்தொற்றுநோய்க்கு அறியப்பட்ட தடுப்பூசி அல்லது குறிப்பிட்ட வைரஸ் தடுப்பு சிகிச்சை எதுவும் இல்லை. அறிகுறி குறைப்பு சிகிச்சை மற்றும் ஆதரவு சிகிச்சை ஆகியவையே முதன்மை சிகிச்சைகளாக உள்ளன.

பரிந்துரைக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகளில் கை கழுவுதல், இருமும்போது ஒருவர் தம் வாயை மூடுவது, மற்றவர்களிடமிருந்து தூ ரத்தை பராமரித்தல், பொது இடங்களில் முகக்கவசம் அணிவது, தாங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக சந்தேகிக்கும் நபர்களைக் கண்காணித்தல் மற்றும் சுய தனிமைப்படுத்துதல் ஆகியவை அடங்கும். இதனால் உலகெங்கிலும் உள்ள அரசுத் தலைவர்கள் தாங்கள் நாட்டில் பயணக் கட்டுப்பாடுகள், ஊரடங்கு, பணியிட முன்னெச்சரிக்கைக் கட்டுப்பாடுகள் மற்றும் வசதிகளை மூடல் ஆகிய நடவடிக்கைகளைச் செயல்படுத்தியுள்ளனர்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்திக்க சில நிமிடம்

- மனித வாழ்வில் மாற்றங்கள் இயல்பானது
- நல்ல இதயம் இறைவனின் சரணாலயம்
- கல்வியின் பயன் அறிவும் பணிவுமாகும்
- புனிதமான செயல்களால் வருவதே புகழ்
- இறைவன் ஒருவனே அவனுக்குப் பலபெயர்கள்
- மனிதன் கடவுளுக்கு ஏற்றவனாய் வாழுதல் வேண்டும்
- அகங்காரத்தை விட்டவனுக்குத் துன்பம் இல்லை
- சத்தியம் ஒன்று அதனை ஆராதனை செய்யும் வழிகள் பல
- கபடமற்ற தர்மமே துணை புரியும்
- அன்புடையார் இன்புற்று வாழ்தல் இயல்பு
- உண்மை கனமானது ஆகவே அதைச் சுமப்பவர்கள் சிலரே
- வாய்மையே மன இருளைப் போக்கும் மாசற்ற விளக்கு
- மனிதர்களுக்கு நல்ல அணிகல் பொறுமை
- நாவுக்கு அழகு இன்சொல்
- பண்பு அமைவது ஒருவருடைய இளமையிலே
- நல்ல மனச்சாட்சிதான் கடவுளின் குரல்
- காரியத்தில் உறுதியாக இருப்பதுதான் வெற்றியின் ரகசியம்
- அதிகாரத்தை விரும்பிச் சுதந்திரத்தை இழக்காதே
- அன்பு செலுத்துவது தெய்வத்தின் பண்பு
- பேச்சைவிடச் சிந்தனை ஆழமானது
- அன்பு எதையும் பொறுத்துக் கொள்கிறது
- மன்னிப்பது மனித இயல்பு
- நற்செயல்களையே நாள்தோறும் செய்க
- இறைவனின் குணம் கருணை
- அன்பைவிட வலிய சக்தி உலகில் எங்கும் இல்லை
- மனதில் உறுதியிருந்தால் பாம்பின் விஷம்கூட சக்தியற்றதாகிவிடும்
- தானம் என்பது பிரதிபலன் கருதாத கொடை
- உரிமைகளின் உண்மையான மூலம் கடமைதான்
- துன்பம் எமக்கொரு மௌன ஆசிரியன்
- நாக்கானது கத்தியைக் காட்டிலும் ஆழமாகப் பாயும்
- பொதுவாக எல்லோரும் சந்திக்கும் இடம் சமாதிதான்
- அன்பையும் வாசனையையும் மறைக்கமுடியாது
- நல்ல நம்பிக்கை என்பது உண்மையின் மறுபிறப்பு
- நூல்களைப் படிப்பதை நிறுத்தக்கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உறவுகள் மேம்பட

குடும்பத்திலும் சரி, அலுவலகத்திலும் சரி மனித உறவுகளில் விரிசல்கள் ஏற்படாமல் இருக்கவும், ஏற்பட்ட விரிசல்கள் மேலும் பெரிதாகாமல் இருக்க.

- நானே பெரியவன். நானே சிறந்தவன் என்ற அகந்தையை விடுங்கள். (Ego)
- அர்த்தமில்லாமலும் பின்விளைவு அறியாமலும் பேசிக்கொண்டேயிருப்பதை விடுங்கள். (Loose Talk)
- எந்த விஷயத்தையும் பிரச்சினையையும் நாசுக்காகக் கையாளுங்கள் (Diplomacy) விட்டுக்கொடுங்கள்.(Compromise)
- சிலநேரங்களில் சில சங்கடங்களைச் சகித்துத்தான் ஆக வேண்டும் என்பதை உணருங்கள். (Toterence)
- எல்லோரிடத்திலும் எல்லா விஷயங்களையும், அவர்களுக்குச் சம்பந்தம் உண்டோ, இல்லையோ சொல்லிக் கொண்டிருக்காதீர்கள்.
- உங்கள் கருத்துகளில் உடும்புப்பிடியாய் இல்லாமல், கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள். (Flexibillty)
- மற்றவர்களுக்குரிய மரியாதையைக் காட்டவும் இனிய இதமான சொற் களைப் பயன்படுத்தவும் தவறாதீர்கள். (Courtesy)
- புன்முறுவல் காட்டவும் சிற்சில அன்புச் சொற்களைச் சொல்லவும் கூட நேரமிலாது போல் நடந்து கொள்ளாதீர்கள்.
- பிரச்சினைகள் ஏற்படும்போது அடுத்தவர் முதலில் இறங்கிவர வேண்டும் என்று காத்திருக்காமல் நீங்களே பேச்சைத் துவங்க முன்வாருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணானாலும் திருச்செந்தூரில் மண்ணாவேன்

மண்ணானாலும் திருச்செந்தூரில் மண்ணாவேன்
ஒரு மரமானாலும் பழமுதிர்ச் சோலை மரமாவேன்

கருங்கல்லானாலும் தணிகை மலையில் கல்லாவேன்
பசும் புல்லானாலும் முருகன் அருளால் பூவாவேன்..
நான்...

( மண்ணானாலும் )

பொன்னானாலும் வடிவேல் செய்யும் பொன்னாவேன்
பனிப் பூவானாலும் சரவணப் பொய்கை பூவாவேன்
தமிழ்ப் பேச்சானாலும் திருப்புகழ் விளக்க பேச்சாவேன்
மனம் பித்தானாலும் முருகன் அருளால் முத்தாவேன்
நான்...

( மண்ணானாலும் )

சொல்லானாலும் ஓம் என்றொலிக்கும் சொல்லாவேன்
பழச்சுவையானாலும் பஞ்சாமிருதச் சுவையாவேன்
அருள் உண்டானாலும் வீடும் பெயரும் உண்டாவேன்
தனி உயிரானாலும் முருகன் அருளால் பயிராவேன்
நான்...

( மண்ணானாலும் )

முருகா.....முருகா.....முருகா..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு
1955 - 09 - 15



உதிர்வு
2021 - 11 - 30

அமரர்.

## திரு.வினாசித்தம்பி கனகலிங்கம்

கோபுரம் சாய்ந்ததே
கொடுந்துன்பம் நேரிட்டதே
எங்கள் கோலங்கள் அழிந்ததுவே
ஏது கதி
தாங்க முடியாத துயரத்தில்
தவிக்குதைய்யா எம் நெஞ்சு
அமைதியாக துயிலும் தங்கள்
ஆன்மா இறைபதம் சேர
இறைவனை இறைஞ்சுகின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும்
[illegible]
ஆசிரியர்.
[illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



மலர்வு
15
09
1955

உதிர்வு
30
11
2021

அமரர்
## வினாசித்தம்பி கனகலிங்கம்

இனிய உள்ளம் கொண்டவரே
இன்பமாய் உறவு கொண்டவரே
இவ்வுலக வாழ்வை முடித்து
இறைவன் அடி சென்றீர்

வஞ்சகமின்றி நடந்தீரே
நெஞ்சம் இன்று குமுறுகின்றது
உம் இழப்புச் செய்தி கேட்டு

இம் மண்ணில் வாழ்வை முடித்து
விண்ணுலகில் வாழ்வைத் தேடி
எம் கண்களில் நீர் பெருக
இன்று நீர் விண்ணகம் சேர்ந்தீரே

உம் ஆன்மா சாந்திபெற வேண்டுகின்றோம்.

துயர் பகிரும்
நாகேஸ்வரன்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்.

தாயின் கருவில் உருவாகி சேயாகப் பிறந்து தந்தையின் அரவணைப்பில்
வளர்ந்து உறவுகளின் கரங்கள் கோர்த்து மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் மகிழ்வுடன் உறவில் கலந்து பூவுலகில் வாழ்ந்தவரே
பிறப்பதும் இறப்பதும் உலக நியதி. கருவிலே மறைவதும் பிஞ்சாகி
மறைவதும் காயாகி கனியாகி உதிர்வதும் உலக நியதியே
எங்கள் அப்பாவும் கோபுர விளக்காக வாழ்ந்து நலம் வளம் பல பெற்று
பூவுலகை விட்டு எம் தலைவன் இறைவன் திருவடி அடைந்து விட்டார்.
அச்செய்தி கேட்டு ஓடி வந்தோருக்கும், உடனிருந்து உதவியோர்க்கும்
தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு துக்கத்தில் கலந்தோர்க்கும்,
வைத்தியசாலையில் உதவி புரிந்தோருக்கும் வானக
வசதிகளை ஏற்படுத்தி தந்தோருக்கும் கண்ணீர் அஞ்சலிகள்
வெளியிட்டோருக்கும், உணவு, நீர் ஆகாரங்கள் வழங்கியவர்களுக்கும்,
கிரியைகள் , சடங்குகள் முறையாக ஆற்றியோருக்கும் உற்றார்
உறவினர் அயலவருக்கும் ஆத்மா சாந்தி பிரார்தனைகளில் கலந்து
கொண்டோருக்கும் இம்மலலை அச்சிட்டு வெளியிட்ட அன்றா
நிறுவனத்தினருக்கும் இந் நூலினை ஆக்கிய ஆசான் ஆ.மா பஞ்சலிங்கம்
அவர்களிற்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஐயாவின் வழிகாட்டுதலைத் தொடரும் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**


**நன்றி**

**30.12.2021**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்ப விருட்சம்






noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org